Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :59 தை 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை 24 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051




## மைத்திரியை கைது செய்க!

*ஐ.தே.க பகிரங்கக் கோரிக்கை*

கொழும்பு, ஜன. 24

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

03



## ரணிலே மீண்டும் ஐ.தே.க தலைவர்

கொழும்பு, ஜன. 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி சஜித்துக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ள நிலையில், மீண்டும் அவரைப் பிரதித் தலைவராக நியமிக்க ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார். இதன் மூலம் தன் தலைமைப்பதவியைத் தக்க வைக்கவும் அவர் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவ 23

## கோத்தாவிடம் பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, ஜன. 24

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை 03

## முடங்கியது கிளிநொச்சி

விரிவு பக்.19



## ரிசாத்தின் சகோதரர் கைதானார்

மன்னார், ஜன. 24

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் சகோதரர் ரிப்கான் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார். போலி காணி உறுதிப்பத்திரங்களைக் கொண்டு மன் 03

# தீர்வு வேண்டுமா? வரட்டும் கூட்டமைப்பு

## அரச தரப்பு பிடிவாதம்

கொழும்பு, ஜனவரி 24

தமிழ் மக்களுக்கானத் தீர்வுப் பொதியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தட்டில் வைத்துத் தரும் என்று இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கனவு காண்பதில் எந்தவிதப் பயனும் இல்லை. முதலில் அவர்கள் எம்முடன் நேரில் வந்து பேச வேண்டும்' இவ்வாறு சபை முதல்வரும் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

23

## அரசியல் கைதிகளுக்காக கோத்தாவை நாட முடிவு!

### ஜனநாயகப் போராளிகள் கட்சி நேற்று அறிவிப்பு

வவுனியா, ஜன. 24

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியை சந்திக்க தீர்மானித்துள்ளோம் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தெரிவித்தனர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுடனான 23

முச்சந்தி முரளி




## வல்வெட்டித்துறையில் நேற்று சுற்றிவளைப்பு

### நாகர்கோயில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24

வல்வெட்டித்துறைப் பகுதியில் படையினர் நேற்று மதியம் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது நாகர்கோவிலில் கடந்த 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று இராணுவத்துடன் முரண்பட்டவர் 23

## தம்பி உருவாக்கிய கூட்டமைப்பு தவறான தலைமைகளிடம்!

### விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.24

தம்பி (பிரபாகரன்) உருவாக்கிய கூட்டமைப்பு தவறான தலைவர்களின் கையில் சென்றால் கொள்கை பறிபோய், சுயநலமே தலைவிரித்தாடும். அப்படித்தான் கூட்டமைப் 23





அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங்-வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

# தமிழரின் காணிகளை வழங்கக் கோரவில்லை

## முஸ்லிம் பேரவை தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 24*

*தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தோ அல்லது சுவீகரித்தோ எங்களை மீள்குடியேற்றுங்கள் என்று அரச நிறுவனங்களிடமோ, அரசியல் பிரதிநிதிகளிடமோ, அதிகாரிகளிடமோ ஒருபோதும் நாங்கள் கோரிக்கை விடுத்ததில்லை.*

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை, நெடுங்குளம் பகுதிகளில் முஸ்லிம்களை குடியேற்றுங்கள் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரிக்கை விடுக்கவில்லை. மாறாக எமக்கு உரித்தான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் சார்ந்து உரிய சட்ட நியமங்களுக்கு அமைவாக நீதியான கோரிக்கைகளையே முஸ்லிம் சமூகம் முன்வைத்து வருகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணம் கிளிநொச்சி முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

அது அனுப்பிய செய்திக் குறிப்பில், கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றில் உள்ள பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதற்காகச் சென்ற யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களத்தினர் அந்தப் பகுதி மக்களினதும், அரசியல் பிரதிநிதிகளினதும் எதிர்ப்பால் அளவீடுகளை மேற்கொள்ளாது திருப்பியனுப்பப்பட்டனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்திருந்தோம். முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்காகவே காணி சுவீகரிப்புச் செய்யப்படுவதாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிலர் தெரிவித்திருந்தனர் என்று செய்தி பரவின. இத்தகைய கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மீள்குடியேறிவரும் முஸ்லிம் சமூகத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை உரிய அரச சட்ட முறைமைகளுக்கு அமைவாகப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் தொடர்ந்தும் எம்மால் முன்னெடுக்கப்படும் என்பதையும், இதற்கு உரிய அரச நிறுவனங்கள், அரச அதிகாரிகள், மாவட்டத்தினுடைய அரசியல் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட எமது சமூகத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் - என்றுள்ளது.

(த-20,111)

# குழந்தை பிரசவித்த ஆண்!

கொழும்பு, ஜன. 24

வயிற்று வலி காரணமாக மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆணொருவர் குழந்தைபிரசவித்தார். தனது அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் சகிதம் மாத்தறை வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் காலை சென்ற ஆணொருவர் தனக்கு வயிற்றில் வலி இருப்பதாகத் தெரிவித்ததையடுத்து அவரை வைத்தியசாலையில் சேர்க்க மருத்துவர்கள் தீர்மானித்தனர்.

வயிற்று வலி அதிகமானதையடுத்து அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஆண் போல் நடித்த பெண் என்பதைக் கண்டறிந்து அவரைப் பிரசவ விடுதிக்கு அனுப்பினர். இதனையடுத்து ஆண் குழந்தை ஒன்று அவருக்குப் பிறந்துள்ளது.

26 வயதுடைய தெவிநுவர பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு ஆண் போல் வேடமிட்டு வந்தவர் என்றும், தெரியவந்துள்ளது. (ம-22)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 24

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை அமரர் திருமதி இராஜரட்ணம் நினைவாக, அவரது மகன் சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தனினால் நடாத்தப்பட்ட மகாஜனன் புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தன் தலைமையில் மதியம் 1.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-23)

## இருவருக்கும் விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜன. 24

எழுதுமட்டுவாள் வடக்கில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட பெண் மற்றும் அவரின் உதவியாளர் ஆகியோரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

அங்கு நேற்றுமுன்தினம் அடிகாயங்களுடன் ஆணின் சடலத்தை கொடிகாமம் பொலிஸார் மீட்டிருந்தனர். சந்தேகத்தில் பெண் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். அதன் மூலமாக அந்தப் பெண்ணின் மற்றோர் உதவியாளரையும் கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் இருவரையும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அதன்போதே மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(த-9)

## அபிராமி பட்டர் விழா

யாழ்ப்பாணம், ஜன. 24

அபிராமி பட்டர் திருவிழா கீரிமலை ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயத்தில் இன்று மாலை முதல் தடவையாக இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## மெய்வன்மை போட்டி

சாவகச்சேரி, ஜன. 24

மட்டுவில் கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினராக பொது சுகாதாரப் பரிசோதகர் ந.கிருஷ்ணரட்சகன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

## விபத்தில் ஆசிரியர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 24

வீதிக்குக் குறுக்கே வந்த நாய் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆசிரியர் ஒருவர் காயமடைந்தார். அவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

38 வயதுடைய குறித்த ஆசிரியர் சண்டிலிப்பாயில் இருந்து ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையிலேயே மேற்படி விபத்து சம்பவித்தது. கைகள், தோள்பட்டை, கால் ஆகிய பகுதிகளில் காயமடைந்த ஆசிரியர் தெல்லிப்பழை மருத்துவமனை விடுதியில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம)

## பல்கலை மாணவிகளிடம் அலைபேசிகள் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஜன. 24



திருநெல்வேலி அம்மன் வீதியில் நேற்று இரவு பயணித்த பல்கலைக் கழக மாணவிகளிடம் இருந்து அலைபேசிகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் வழிப்பறி செய்யப்பட்டன.

தென்னிலங்கை மாணவிகள் சிலரே இந்த விசமச் செயலால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

(ம-105)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து சின்னையா



ஆலங்குழாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சின்னையா நேற்று (23.01.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற நாகமுத்து சின்னையாவின் (கிளை முகாமையாளர் - ஐக்கிய வியாபார சங்கம், யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற புவனமலர் மற்றும் சிவஞ்ஞானம் (நீர்வேலி) ஆகியோரின் சகோதரியும் சிவராணி, சிவதாசன், ஜெயதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் (காங்கேசன்துறை) மற்றும் சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் வசந்தாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதன்லால் (ஜேர்மனி), மீராலினி, நஜன் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), லக்ஷனா (சுவிஸ்), மயூரன் (பொறியியலாளர், சவுதிஅரேபியா), Dr. தாட்சாயினி (யாழ் போதனா வைத்தியசாலை), நிறோஜினி (ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), சைலஜன் (நிகழ்ச்சித் தயாரிப்பாளர் IBC தமிழ்), துளசிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2020) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 481 4600, 021 224 0453 தகவல்: ஜெயதாசன் (மகன்)

## தென்பகுதி மீனவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் வில்லுக்குளம் பகுதியில் நேற்று மீனவரொருவர் சடலமாக மீட்கப்பட்டார். தென்பகுதியில் இருந்து வந்து முல்லைத்தீவில் மீன்பிடியில் ஈடுபட்டுவந்த யாஎல பகுதியை சேர்ந்த 63 வயதான மொகஸ்டீன் கிறிஸ்தோபர் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த நபர் கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நிலையில் வில்லுக்குளத்தில் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டார். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (ம-246)



## கண்ணீர் அஞ்சலி



### செல்வி பொன்னுத்துரை குகநேசமலர்

உரும்பிராய் இந்துவின் பழைய மாணவியும் தான் கற்ற கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் அரும் பணி ஆற்றி ஓய்வு பெற்றும் கல்லூரி வளர்ச்சியில் பெரும் தொண்டாற்றி வந்த செல்வி பொன்னுத்துரை குகநேசமலர் அவர்களின் மறைவு கல்லூரி சமுகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தவருக்கும், நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தை தெரிவிப்ப தோடு அவரது ஆன்மா அம்பாள் அடியில் சாந்திபெறபிரார்த்திக்கிறோம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
உரும்பிராய், கனடா, லண்டன்


## கோத்தாவிடம்....

அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றபோதே, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதை அவர் உறுதிப்படுத்தினார். (ம)

## ரிசாத்தின்...

னாரில் காணிகளை அபகரித்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## மைத்திரியை...

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அக்கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

'முன்னாள் பாதுகாப்புச் செயலாளரோ அல்லது பொலிஸ்மா அதிபரோ அந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. பெஜட் வீதி அரச மாளிகையில் சொகுசாக வாழ்ந்துவரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு இப்போது ஜனாதிபதிக்கான சிறப்புரிமை இல்லை. எனவே, அவரைக் கைது செய்யலாம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பற்றி தெரிந்துகொண்ட பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று ஒளிந்துகொண்டார் மைத்திரிபால. அவர் செய்த உயிர் வேள்வியே அந்தத் தாக்குதலாகும்' -என்றார்.

(ம-22)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (25.12.2019) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

### திருமதி கமலாம்பிகை திருநாவுக்கரசு

அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து பேருதவி புரிந்த எம்து உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், இறுதிச்சடங்கின் போது அஞ்சலி வெளியிட்டோருக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக மற்றும் முகநூல் போன்ற சமூக தளங்கள் ஊடாக அஞ்சலி வெளியிட்டு ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24.01.2020) வெள்ளிக்கிழமை நடைபெறும் எமது தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தோற்றம்** 07.06.1940 **மறைவு** 25.12.2019

**குறிப்பு:** நேரில் அழைக்க தவறிய அனைவரையும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு

8/7, முதலியார் கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தி. கங்காதரன் (மகன்)



## நீங்காத நினைவலைகள்

20ஆம் ஆண்டு

மலர்வு 29 - 11 - 1913 உதிர்வு 24 - 01 - 2000



அமரர் மனுவேல் மிக்கேல்ப்பிள்ளை

24ஆம் ஆண்டு

மலர்வு 02 - 02 - 1923 உதிர்வு 17 - 02 - 1996



அமரர் மரியப்பிள்ளை மிக்கேல்ப்பிள்ளை

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
எம் ஐயா அம்மா உங்கள் நினைவலைகள் எம்
நெஞ்சங்களில் என்றுமே நிலைத்திருக்கும்
தங்கள் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

32. சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பா உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?

தோற்றம் 20 ... 09 ... 1933



மறைவு 04 ... 02 ... 2019

### அமரர் நாகலிங்கம் இராசு

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (24.01.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

இல.262/1, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### செல்வி குகநேசமலர் பொன்னுத்துரை (மலர் ரீச்சர்)

(ஓய்வுபெற்ற உபஅதிபர் – உரும்பிராய் இந்துக்கல்லூரி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி குகநேசமலர் பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற உப அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி) கடந்த **(20.01.2020)** திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (சங்கக்கடை மனேஜர்) அன்னம்மா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும் கோபிநாத்சிங் (Swiss), சற்குணநாதன் (ஓய்வுபெற்ற லிகிதர் - கா/ சீமெந்து கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சரத்சந்திரன் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் - பவா), அனுராதா, செந்தூர்ச் செல்வா, விவேகினி (UK), அனித்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் -காலஞ்சென்ற சற்குணநாயகி மற்றும் திகழ்மதி, நவஜோதி, மணிமாறன், ரதிதேவி, காலஞ்சென்ற கிருபா (UK) மற்றும் பத்மஸ்ரீ (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் கோகுலன் (UK), காலஞ்சென்ற ராகுலன் மற்றும் திலகாஜினி (UK), கௌசல்யா (அவுஸ்திரேலியா), கஜிபன், பிறிந்தா, வினோதன் (அவுஸ்திரேலியா), விஜிதன் (Canada), றாஜி, டாலி, நிதர்சனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிந்து, கமல் (நோர்வே), குஷானி (UK), தனுஜா (UK), விதுஷா (UK), அனோஜா (UK), வெண்ணிலா (நோர்வே), எழில்நிலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(24.01.2020)** வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் **11** மணியளவில் வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பன் வீதி, உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்

# தூக்கிக் காட்டினாரா? சிப்பாய்க்கு தர்மஅடி

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா. ஜன. 24
குடிமனை முன்பாக சிறுநீர் கழித்தார் என்று கூறப்படும் இராணுவச் சிப்பாய், பின்னர் தனது ஆடையைத் தூக்கிப் பிடித்தவாறு கர்ப்பிணிப் பெண் ஒருவரை அழைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ள்ளது.

அந்தத் தகவல் பரவியதால் அங்கு சேர்ந்த ஊரவர்கள் சிப்பாய்க்குத் தர்ம அடி கொடுத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா நொச்சிமோட்டையில் நேற்று மதியம் இடம்பெற்றது. அவர் இராணுவச் சிப்பாய் என்றும் சிங்கள மொழி பேசுகிறார் என்றும் சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்கள் தெரிவித்தனர்.

"எங்கள் வீட்டுக்கு முன்பாக வந்து சிறுநீர் கழித்துள்ளார். அவ்வாறு செய்தது மட்டுமன்றி, சிப்பாய் மர்ம உறுப்பைக் காட்டி தன்னை அழைத்தார்" என்று அந்தப் பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவரை நெருங்கிச் சென்றபோது தப்பிச்செல்ல முற்ப ட்டார். சம்பவம் பற்றி ஊரவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் ஒன்றுசேர்ந்த ஊரவர்களும் வழிப்போக்கர்களும் சிப்பாயைப் பிடித்துத் தாக்கினர்.

தான் ஓர் இராணுவச் சிப்பாய் என்றும் வவுனியா ஈரட்டைப் பகுதி முகாமில் பணிபுரிகின்றேன் என்றும் வேறு தேவை கருதி அந்த இடத்துக்கு வந்திருந்தேன் என்றும் ஊரவர்களிடம் பிடிபட்டவர் தெரிவித்தார். சம்பவம் பற்றி பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் அவரை ஓட்டோவில் ஏற்றிச் சென்றனர்.

பொலிஸ் விசாரணையிலும் அவர் தன்னை இராணுவச் சிப்பாய் என்றே கூறியுள்ளார். அவரிடம் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

சோலாரிஸ் எனர்ஜி இன் மாபெரும் பரிசுமழை!!!

இச்சலுகை 02-02-2020 வரை மட்டுமே!!! முந்துங்கள்!!!

20kW சோலர் சிஸ்டம்
Rs. 2,390,000/-
சலுகை காலத்தினுள் முற்பதிவு செய்யும் முதல் 10 வாடிக்கையாளர்களுக்கு
'LG 260L Fridge' முற்றிலும் இலவசம்!!!




இச் சோலர் சிஸ்டத்தை பொருத்துவதன்மூலம் மாதாந்தம் ரூபா50,000/- வருமானமாக பெறமுடியும்

FREE GIFT

40kW சோலர் சிஸ்டம்
Rs. 4,390,000/-
சலுகை காலத்தினுள் முற்பதிவு செய்யும் முதல் 10 வாடிக்கையாளர்களுக்கு
'TVS wego' முற்றிலும் இலவசம்!!!



இச் சோலர் சிஸ்டத்தை பொருத்துவதன்மூலம் மாதாந்தம் ரூபா100,000/- வருமானமாக பெறமுடியும்

2kw
5,500/- Monthly
Or
Rs. 350,000/-

3kw
7,350/- Monthly
Or
Rs. 470,000/-

4.6kw
10,800/- Monthly
Or
Rs. 690,000/-

எம்மைப்பற்றி...

2012ல் இலிருந்து இயங்கி வரும் நாம், சிறந்த தரம், நியாயமான விலை மற்றும் அதீத நம்பிக்கை உடன்கூடிய 24/7 மனிநேர வியாபரத்திற்க்குப்பிந்திய தரமானசேவைகளை வழங்குகின்றோம்.

யாழ்ப்பாணத்தின் மிகப்பெரும் சோலர் கட்டமைப்பை வட மாகாணசபைக்கு பொருத்திய நாம் மேலும் 24,000க்கும் மேற்பட்ட சோலர்பனல்களை நாடளாவிய ரீதியில் இணைத்துள்ளோம்.

30 வருட உத்தரவாதத்துடன் கூடிய சோலர் சிஸ்டங்களை வழங்கும் நாம் அவற்றைப் பொருத்துவதற்குத் தேவையான கடன்வசதிகளை குறைந்த வட்டி வீதத்தில் வங்கிகளின்ஹூடாக ஏற்படுத்தித் தருகின்றோம்.

எமது உபகரணங்கள்

"PhonoSolar" இது சீன அரச நிறுவனமான உலகின் 500 மிகப் பெரும் நிறுவனங்களில் ஒன்றான SINOMACH ஆல் தயாரிக்கப்படுவதால் அதீத நம்பகத்தன்மையைக் கொண்டது.

வினைத்திறன் குன்றாது நீண்டகாலம் உழைக்கக் கூடியதென Tier -1 & DVN-GL தரச்சான்றிதழ் பெற்றது.

"SAJ" இன்வேட்டர் Photon - Top 5 விருதினைப் பெற்றது. ஐரோப்பிய நாடுகளில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

பிரத்தியோகமாக இலங்கையின் காலநிலைகளுக்கேற்ப தயாரிக்கப்படுவதனால் நீண்டித்து உழைக்கக்கூடியது.

யாழ்ப்பாணக்கிளை
690 கே.கே.எஸ். வீதி
இணுவில், யாழ்ப்பாணம்
077 425 5504

solaris energy
...அழையுங்கள்...

தலைமை அலுவலகம்
9A உபதிஸ்ஸ வீதி
கொழும்பு-04
077 425 5500

## மட்டு.ஊடக அமையத்துக்குள் துண்டுப் பிரசுரங்கள்

கொழும்பு. ஜன. 24
மட்டக்களப்பில் ஊடகவியலாளர்கள் 6 பேருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு ஊடக அமையத்தின் அலுவலகத்தின் உள்ளேயே குறித்த துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் நினைவு நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டவர்களின் ஒளிப்படத்தில் குறித்த ஊடகவியலாளர்கள் 6 பேரின் முகங்களுக்கு வட்டம் இடப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப் பிரசுரத்தில், 'எச்சரிக்கை! எச்சரிக்கை! இவர்கள்தான் வெளிநாட்டுப் புலிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அரசுக்கு எதிராகச் செயற்படும் ரிப்போட்டர்ஸ். இவர்களுக்கு விரைவில் மரண தண்டனை விதிப்போம்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)

## 50 லீற்றர் கசிப்புடன் நபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24
காங்கேசன்துறை சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் ஐம்பது லீற்றர் கசிப்புடனும் இரண்டு பெரல் கோடாவுடனும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வயாவிளான் பகுதியில் உள்ள பற்றை ஒன்றில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவர் அச்சுவேலிப் பொலிஸாரிடத்தில் பாரப்படுத்தப்பட்டார். (ம-26)

## கல்வித்தினம்

யாழ்ப்பாணம்,ஜன.24
சர்வதேசகல்வியகமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து சர்வதேச கல்வித்தினத்தை இன்று அனுஸ்டிக்க வுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய கல்வி அமைச்சின் செயற்திட்டப் பணிப்பாளர் கந்தையா பத்மானந்தன், சிறப்பு விருந்தினராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் த. மகாசிவம், கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உபஅதிபர் த.கோபாலகிருஸ்ணன், விசேட விருந்தினராக மருத்துவக் கலாநிதி வை.தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கல்விப்புலம் சார்ந்த அறிஞர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் வடமாகாண செயலாளர் ஜெ.நிஷாகர் அழைப்பு விடுத்துள்ளார். (க)

வாடகைக்கு - குத்தகைக்கு
TATA பிக்கப் வாகனம் மாதாந்த வாடகைக்கு - குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.
076 660 1600

வேலையாள்கள் தேவை
சாவகச்சேரி வீதி, மந்திகையில் இயங்கும் ஸ்ரீதேவி சைவ உணவகத்துக்கு சமையல் செய்பவர் மற்றும் வெயிற்றர் வேலை தெரிந்தவர்கள் தேவை. தங்கிநின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
077 848 8619

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான வேலைவாய்ப்பு



அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனம் ஊடாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக வவுனியாவில் கடமை புரிய விரும்பும் நல்ல குண நலமுடைய மற்றும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ள 21 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தங்களது விண்ணப்பங்களை இம் மாதம் 27/28/29 ஆகிய தினங்களில் நேரடியாக சமர்ப் பித்து நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளமுடியும்.

நேர்முகத் தேர்வு இடம்பெறும் இடம்:
அங்கர் பாதுகாப்பு சேவை
இல. 255B புகையிரத நிலைய வீதி,
கரப்பன்காடு, வவுனியா.
024 222 8169
(cs 651) (13.17)

# தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.24

வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் தரம் I, II மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவியிலுள்ளவர்களுக்கான வினைத்திறமை காண தடைப்பரீட்சை நாளை சனிக்கிழமை தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 2219939 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்பபு கொள்ளுமாறு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (க)

# நீதிபதி கிஹானை கைதுசெய்யத் திட்டம்

கொழும்பு, ஜன. 24

இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர், கொழும்பு குற்றவியல் பிரிவுக்கு இதற்கான அறிவுறுத்தலை நேற்று வழங்கியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் மேற்கொண்ட சர்ச்சைக்குரிய அலைபேசி அழைப்பு தொடர்பிலேயே அவரைக் கைது செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Timber works for MRI & CT Scan Room and Aluminium Partition Door for Hospital Library | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black-listed and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 27.01.2020 up to 11.02.2020 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 12.02.2020, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Deputy Director**
**Teaching Hospital,Jaffna** (IN/12379)(11.17) **24.01.2020**


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினரும் சித்த மருத்துவத்துறையின் தலைவருமான **திருமதி தயாளினி திலீபன்** அவர்களின் அன்புத் தந்தையாரான

**கார்த்திகேசு அருணாசலம்**

அவர்கள் கடந்த **(21.01.2020)** அன்று இறைபதம் எய்தினார்.

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மல்லிகாதேவி (மல்லி) மகேந்திரராஜா**

தோற்றம்
24.11.1927


மறைவு
04.02.2019

திதி:- அமாவாசை (24.01.2020)

ஆண்டொன்று ஆனதுவோ!
ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் நெஞ்சம்
அழுகிறது
உங்கள் நினைவுகளை
நினைத்து

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
மேதேலேஸ் லேன், மானிப்பாய்.

# In Memory Of
# Dr. Vettivelu "Nalla" Nallainayagam



**Vettivelu Nallainayagam PhD**, formerly of the Sri Lanka Administrative Service (SLAS), later Professor of Economics at Mount Royal University (MRU) and now Professor Emeritus MRU, passed away peacefully on Monday, January 20, 2020 surrounded by family.

Dr. Nallainayagam received his B.A. (Honours) in Economics from University of Sri Lanka, M.A in Economics from University of Manchester, U.K., and PhD in Economics from McGill University, Canada.

Originally from Thirunelvalley North, Nalla has called Calgary his home for the past thirty-two years. His passions in life were helping others and promoting the value of culture and education. He was involved with institutions such as the Public Library, Education Matters, Glenbow Museum, the Ethno Cultural Center and the Sri Murugan Society of Alberta. He won many acco lades for his contributions including the Queen Elizabeth II Golden Jubilee Medal, Immigrant of Distinction Award, and the Teaching Excellence Award at MRU.

Nalla was the beloved husband of Uma, loving father of Nayani (Ajay) and Jeevan (Jordan) and grandfather of precious Akshay, Kavya, Abigail and Jacob. He also leaves behind his sister Shanthanayaki; brothers-in-law Col. Harindran, Sundaresan and Arunthavanathan; and sisters-in-law Shanthi & Rajanayaky. Nalla was predeceased by his parents Vettivelu and Ratnam of Thirnelvalley; parents-in-law Ramalingam and Parameshwari; brothers Sarvaloganayagam (SLAS) and Sabanayagam (SLAS); sister Sowpackiyanayaki; sisters-in-law Padmini and Pushpawathy; and brother-in-law Sundaralingam.

Condolences, memories and photos may be shared and viewed on Nalla's obituary at www.McInnisandHolloway.com.

D.O.B February 27, 1943 D.O.D January 20, 2020

**Calgary, Canada** **Family members**

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

**கழிவகற்றல் செயற்பாட்டிற்காக உழவு இயந்திரம் மற்றும் இழுவைப் பெட்டி என்பவற்றை சாரதியுடன் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்**

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேவையான தகைமைகள்., மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன்மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 02.00 மணிவரை 27.01.2020 ஆம் திகதியிலிருந்து 10.02.2020ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி .புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 27.01.2020 தொடக்கம் 10.02.2020ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்த்து)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 10.02.2020ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
06. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கழிவகற்றல் செயற்பாட்டிற்காக உழவு இயந்திரம் மற்றும் இழுவைப் பெட்டி என்பவற்றை சாரதியுடன் வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் | NP/14/41(15) /Tractor Service/ 2020 | 06மாதம் | 5,000.00 |

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
24.01.2020

(IN.12382) (13.17)

## கேள்வி அறிவித்தல்.
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**நீர்வேலி திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தேங்கியுள்ள கழிவுகளை பைக்கோலோடர் மற்றும் புல்டோசர் இயந்திரங்களின் உதவியுடன் ஒதுக்கி துப்புரவு செய்தல் சேவைக்கான விலைமனு கோரல்**

தலைவர், பிரதேச சபை பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நீர்வேலி திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தேங்கியுள்ள கழிவுகளை பைக்கோ லோடர் மற்றும் புல்டோசர் இயந்திரங்களின் உதவியுடன் ஒதுக்கித் துப்புரவுசெய்தல் சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

| இல | சேவை | சேவை வழங்க எதிர்பார்க்கப்படும் இயந்திரவகை | எதிர்பார்க்கப்படும் இயந்திரவேலை மணித்தியாலங்கள் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பைக்கோ லோடர் மற்றும் புல்டோசர் இயந்திரத்தின் உதவியுடன் திண்மக்கழிவுகளை ஒதுக்குதல். | 1. Bull Dozer- D4 (Chain wheel) 2.Backo Loader | தலா 30 மணித்தியாலங்கள் | 10,000.00 | 2020.04.13 |

01. சேவை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் இயந்திரவேலை மணித்தியாலங்கள் 20% அளவில் வேறுபடமுடியும்.
02. சேவை வழங்குனர் குறித்தசேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.
03. சேவை வழங்குநர்களின் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
04. சேவை வழங்குநர்கள் பைக்கோலோடர் இயந்திரத்தின் உதவியுடன் திண்மக்கழிவுகளை ஒதுக்குதல் சேவை பெறுகைக்கான- ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பருத்தித்துறை வீதி புத்தூரில் அமைந்- துள்ள தலைமை அலுவலகத்தில் 2020.01.27ஆம் திகதி தொடக்கம் 2020.02.10 ஆம் திகதிவரை அலுவலகநாள்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ1000/-(வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்கள் 2020.02.10 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல்வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப் படுவர்.
06. இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிவரை தேவையேற்படின் தங்களால் கோரப்படுகின்ற விலைமனுவுக்கு அமைய பிரதேச- சபையின் கோரிக்கையின் பிரகாரம் சேவை வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.
07. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகை கோரலைக் கோருவ- தற்கும் பெறுகைக்குழு தலைவருக்குஅதிகாரம் உள்ளது.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**உள்ளூராட்சிமன்றபெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்குபிரதேசசபை,**
**புத்தூர்.**
**24.01.2020**

## வீடு வாடகைக்கு


**மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து பருத்தித்துறை வீதியில் 500 m தூரத்தில்**
**ரெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ் இன்**
**மேல் மாடி** வீடு வாடகைக்குண்டு.
**வைத்தியசாலை பணியாளர்களுக்கு**
முன்னுரிமை வழங்கப்படும்.

(IN.10963)(13.17)

**தொடர்பு: 077 869 5418**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09
02
1955



ஆண்டவன் அடியில்
04
02
2019

**அமரர் தம்பு சந்திரசேகரராசா (இந்திரன்)**
திதி:- அமாவாசை

மண்ணுலகை விட்டு மறைந்தாலும் எங்கள்
மனதைவிட்டு நீங்கள் மறையவில்லை
மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரோ உங்கள் ஆத்மா சாந்தியடைய்
கண்ணீர்த் துளிகளை காணிக்கை ஆக்குகின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(CS/30597)
(41,17)


என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

அரசன்திடல்,
சிறுப்பிட்டி கிழக்கு.

அன்பு மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
12
*
12
*
1951



மறைவு
21
*
01
*
2020

## கனகசபை அம்பிகைபாலன்

யாழ்ப்பாணம் உடுவிலை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி முற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை அம்பிகைபாலன் அவர்கள் 21.01.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகசபை, மாணிக்கம், அவர்களின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி இராமலிங்கம் நாகம்மா அவர்களின் மருமகனும், கல்யாணியின் அன்புக்கணவரும்,பிரியதர்சினி, பிரியதாரணி, மயூரி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஹிஷாம், விதுரனன் ஆகியோரின் அன்புமாமனாரும், ஆத்திக்கின் அன்பு பேரனும், விஜயகுமாரி, காலஞ்சென்ற சந்திரகுமாரி, ஜெயக்குமாரி, காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்பு சகோதரனும், ஈஸ்வரி, குருமூர்த்தி, திலகவதி, வசந்தமலர், காலஞ் சென்றவர்களான சத்தியமூர்த்தி, சந்திராவதி, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் 25.01.2020 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு, 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஈமைக்கிரிகைகள் நடைபெற்று நண்பகல் 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

**இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல் – குடும்பத்தினர்
**Tel: 077 3635213**




E.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

ரோயல் மருத்துவமனையின்
இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

| யாழ்ப்பாணம் | கண்டி |
| --- | --- |
| 25th January 2020 | 26th January 2020 |

முன்பதிவுக்கு: 075 40000 12, 076 0155 882




மகப்பேறின்மை பிரச்சனைகளுக்கான உங்கள் கேள்விகளுக்கு
டொக்டர். கீதா ஹரிப்ரியா அவர்கள் பதிலளிக்கிறார்.

ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடையுங்கள்!

27 ஆண்டுகளாக இலங்கைத் தம்பதிகளின் நம்பிக்கையைப் பெற்று குழந்தைக் கனவை நனவாக்கி, உலகளவில் சிறப்பு அங்கீகாரங்களைப் பெற்ற பிரசாந்த் மருத்துவமனை!



பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டொக்டர். கீதா ஹரிப்ரியா கலந்து கொள்ளும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

குழந்தைப்பேற்றை உறுதிப்படுத்தும் புதிய தொழில் நுட்பங்களுடன் அதிநவீன சிகிச்சை!

பிரசாந்த் மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை,
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

11th EDITION

JITF 2020

24 25 26

ஜனவரி JANUARY

10.00AM - 8.00PM

முற்றவெளி மைதானம்

(யாழ் கோட்டைக்கு அருகில்)

MUTTRAWELI GROUNDS (NEXT TO JAFFNA FORT)

PLATINUM SPONSOR: INSEE CEMENT

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

IN ASSOCIATION WITH: CCIY



## Message from

*Mrs. P.S.M.Charles*
*Governor,*
*Northern Province*

*I am delighted to send this felicitation message to the 11th Edition of "Jaffna International Trade Fair (JITF 2020)" organized by Lanka Exhibition and Conference Service (Pvt) Ltd (LECS) together with the chamber of Commerce & Industry of Yarlpanam (CCIY) with the support of Jaffna Municipal Council, Sri Lanka Convention Bureau (SLCB), International Business Council, the ministry of Industry & Commerce and The Consulate General of India in Jaffna.*

*Jaffna International Trade Fair which is organized for the 11th successful year is known to be the largest International Trade Fair Exhibition in Northern Province. The fair covers Products, Equipment and Machineries of multi-sectors like Construction, Automobile, Apparel, Agriculture, Information Technology, Hospitality, Banking and Finance. I believe that due to the inspiration of JITF, people of Northern Province from various sectors get a great exposure and experience by having introduction to current trends and technology to an area which has been isolated for several decades.*

*I understand that there is an increase in the number of Exhibitors and Trade-Visitors, annually, for Jaffna International Trade Fair. Further, it has become the primary networking and provides ample opportunities for the trade from local, as to have face to face meetings with key officials from the public and private sectors, annually. It makes me happy to congratulate the Regional, National and International Organizations which play the major, facilitative and supportive role to organize 11th Jaffna International Trade Fair in a successful way.*

*I look forward to your massive continuous success and would like very much to accompany all of you to move forward for ensuring the steps towards advancement and development of our people.*
*Thanks.*

*Mrs. P.S.M.Charles*
*Governor*
*Northern Province*



## Message from

*N.Vethanayahan*
*District Secretary/ Government Agent*
*District Secretariat, Jaffna*

*I would like to extend my sincere greeting to all the participants of Jaffna International Trade Fair 2020.*

*The institutions and industries such as education, agriculture, IT, health should pay particular attention to the issues such as food security, building up agricultural potential, promote healthy living and modern medicine. I hope this event will bridge the gap between North and South in providing equal facilities and opportunities. It help bring together and solidify relationships between manufactures, suppliers and consumers. Therefore fostering the development of the country.*

*The Jaffna International Trade Fair 2020 represent the opportunity to look to the future, cultivate new ideas and to build bridge for more productive collaboration. It plays important roles in marketing, business networking and provide supply chain. Which promote local business to grow and attract new business to come.*

*I wish the participants every success in their work and hope they achieve the goals and set themselves and outstanding results.*

*Thanking You*

*N.Vethanayahan*
*District Secretary/ Government Agent*
*District Secretariat,*
*Jaffna*



## Message from

*Emmanuel Arnold*
*Mayor of Jaffna*
*Jaffna Municipal Council*

*It is with great pleasure I extend this message for the eleventh Jaffna International Trade Fair which is to be held from 24.01.2020 for three consecutive days.*

*The Jaffna Municipal Council is proud to have this kind of fairs within its limits for the betterment of local economy especially for the people of the north.*

*This fair has become a social event annually in Jaffna. This fair empowers the people of Jaffna in all their activities in trade.*

*I wish to thank the Lanka Exhibitions and Conference Services (Pvt) Ltd for their enthusiasm in organizing this fair with the untiring effort of the Chamber of Commerce and Industry of Yarlpanam (CCIY) and Sri Lanka Convention Bureau. In addition I praise the magnanimous support of the consulate general of India in Jaffna, and other stakeholders.*

*Further I appreciate the release of exhibitor directory in giving all the details of the exhibition. I expect a large gathering to see the exhibition as it was in the past.*

*I wish the organizers of JITF to have a fair in grand scale in 2020.*

*Emmanuel Arnold*
*Mayor of Jaffna*
*Jaffna Municipal Council*



## Message from

*S. Balachandran*
*Consul - General of India*
*Jaffna*

*I am happy to hear that the 11th Edition of the Jaffna International Trade Fair 2020 is going to be held from January 24-26, 2020 this time at the Muttraweli Grounds.*

*The fact that the organisers have shifted the venue from the Municipal Grounds to a larger Muttraweli Grounds shows the popularity of the fair among the exhibitors and the need for accommodating all of them, given the space constraints at the Municipal Grounds.*

*With the reopening of the Jaffna International Airport on October 17, 2019, the connectivity with Jaffna has improved significantly. Once commercial operations begin from the KKS Port, the last but the most important connectivity issue will stand resolved, ushering in a new era of development in the Northern Province of Sri Lanka.*

*India has been a partner country associated with this Fair since the JITF's inception. Indian companies under the aegis of India's apex Chambers of Commerce and Industries have been regularly participating in the Fair.*

*We are confident that the 11th Edition of the Fair will achieve its objectives and many more successes await the fair in the future.*

*S. Balachandran*
*Consul - General of India, Jaffna*



## Message from

*V.K.Vignesh*
*Chairman*
*Chamber of Commerce & Industries of Yarlpanam*

*I consider it my honour and privilege to write this message for the Jaffna International Trade Fair (JITF) of January 2020. As an ardent supporter and a committed attendee of JITF over the years, I am in no doubt of the event's success, it will be yet another incredible show!*

*A notable event, firmly inscribed on Yarlpannam's events calendar, JITF continues to impress the business community offering a common platform for industrialists, business entities and entrepreneurs. It is the ultimate proposal to the business community to meet under one 'roof' and trade in a virtual multinational marketplace. It is a perfect opportunity for the exhibitors to communicate, promote and implement the economic development needed to attract, develop and grow their businesses and clientele. I believe much attention is on the Northern Province and potential investors view JITF as an attractive opportunity to enter the market. We must embrace this opportunity and offer suitable incentives to invite and retain their interests.*

*As the Chairman of CCIY, I pledge prompt action where necessary to follow up on JITF leads and extend the Chamber's support to all interested stakeholders. I'm proud of the many accomplishments made by JITF in the past years and look forward to generate yet another atmosphere of economic growth and development in Jaffna. I convey my heartfelt gratitude to Lanka Exhibition and Conference Services for their contribution and immeasurable support in organising this event. I would like to say a huge thank you to the audience and participants and emphasise the key role they play in making JITF a vibrant event. The Media and the sponsors are the pillars of its success. My sincere thanks go to my dear friends from media and sponsors.*

*V. K. Vignesh*
*Chairman*
*Chamber of Commerce and Industries Yarlpannam.*



## Message from

*Arjun Dharmadasa*
*Managing Director*
*Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd*

*It is with great pleasure that I extend this message for the 11th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors*

*As per the statistics there is a significant increase of the visitors to the exhibition year on year which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community.*

*Special attractions at JITF will be the "Made In Jaffna" pavilion with over 40 stalls, under the flagship of Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY).*

*I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality. I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council, Consulate General of India in Jaffna, the Sri Lanka Convention Bureau, Sponsors, Exhibitors and & participants.*

*I also thank the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.*

*Arjun Dharmadasa*
*Managing Director*
*Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd*

OFFICIAL PARTNERS

TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel | FOOT WEAR: DSI | FOOD: Rinunu | COSMETICS: British Cosmetics | POWER TOOLS: DIMO | PRINT MEDIA: உதயன்

ENDORSED & SUPPORTED BY

Ministry of Industry and Commerce | Jaffna Municipal Council | Consulate General of India Jaffna

PARTNER COUNTRY

India

ர.ரெஜினா,
*ஊடகக் கற்கைகள் துறை,*
*யாழ். பல்கலைக் கழகம்.*

# பசுமைப் போர்வையை பாதுகாப்போம்



பசுமைப் போர்வை பொதுவில் காடுகளும் புல்வெளிகளுமே. பசுமைப் போர்வை அழிவுக்கு முகம் கொடுத்துள்ளது. அதிகரித்து வரும் மக்களின் தேவைகளின் விளைவாக கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு காடுகள் அழிக்கப்படுகின்றன. மனித நடவடிக்கையால் பசுமைப் போர்வை வீழ்ச்சியடைகின்றது.

காட்டு மரங்கள் உயிரினங்களுக்கு சுவாசிப்பதற்குத் தேவையான ஒட்சிசனை வளிமண்டலத்தில் சேர்க்கின்றன. மழைவளத்தைப் பெருக்கவும் துணையாகவுள்ளன. மண்ணரிப்பையும் தடுக்கின்றன. நிலத்தில் சேரும் இலைகள் மண்ணில் உக்கி மண் வளத்தையும் அதிகரிக்கின்றன. பல வகையான உயிரினங்களின் உறைவிடமாகவும் உள்ளன.

காட்டிலுள்ள மரங்கள் விறகு மற்றும் மரத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. நன்மைகளைத் தருகின்ற பசுமைப்போர்வை பலவாறான தேவைகளுக்காக அழிக்கப்படுகின்றன.

விவசாய உற்பத்திப் பெருக்கும், மக்கள் தொகைப் பெருக்கம், பிரமாண்ட அபிவிருத்தி, மனிதர்களின் நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் காட்டுத் தீ, இயற்கையாகப் பரவும் காட்டுத் தீ என்று காடுகள் பலவகைகளில் அழிவுக்கு உட்படுகின்றன.

காடழிப்பானது 1990ஆம் ஆண்டுக்கும் 2000ஆம் ஆண்டுக்கும் இடையில், சராசரியாக ஒரு வருடத்தில் 26 ஆயிரத்து 800 ஹெக்டேயர் வனப் பகுதிகளை இழந்தது. 2000ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கு இடையில் இது வருடத்துக்கு 1.46 சதவீதமாக துரிதமடைந்தது எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காடுகள் அழிவடைகின்றமையால் வன விலங்குகள் ஊருக்குள் வருகின்றன. காடழிப்பால் புவியின் வெப்பநிலையும் அதிகரித்து வருகின்றது. காட்டில் காணப்படும் மருத்துவ மூலிகைகள், பழங்கள், விதைகள் என்பவற்றின் பயன்களும் இல்லாமற் போய்விடுகின்றன. காடுகளை அழிக்காமல் அவற்றைப் பாதுகாக்கவேண்டும். வன வளத்தைப் பாதுகாப்பதற்கு இறுக்கமான சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை ஒழுங்காக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மீள் நடுகை ஊடாக காடுகள் உருவாக்கப்பட வேண்டும்.


இவ்வாறான வழிமுறைகளைப் பயன்படுத்தி பசுமைப் போர்வையைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடப்பாடாகும். எஞ்சியுள்ள பசுமைப் போர்வையை அழியாது காப்பாற்றுவதுடன் மீள் வனமாக்களையும் கைக்கொள்ளவேண்டியது அவசியமாகும். ■

கே.எஸ்.சிவஞானராஜா

# அபிராமிப்பட்டர் திருவிழா

*விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப் பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே?*

அபிராமிப்பட்டருக்கு அம்பாள் அற்புதம் காட்டிய அதிசயமான பாடலே விழிக்கே அருளுண்டு என்ற எழுபத்தொன்பதாவது அபிராமி அந்தாதிப் பாடலாகும். அபிராமி அந்தாதியில் நூறு பாடல்கள் உண்டு. ஒரே நாளில் அபிராமிப் பட்டர் இந்தப் பாடல்களை அந்தம் ஆதியாக வரும்படியாகப் பாடி அம்பாளைத் தரிசனமாக்கி இருக்கின்றார்.



ஒரு முறை சரபோஜி மன்னன் திருக்கடவூர் அம்பாளைத் தரிசிக்க விரும்பியவராய் அங்கு சென்றபோது, அம்பாள் பக்தரான அபிராமிப்பட்டர் அதீத பத்தியில்மூழ்கியவராய்தியானத்தில்ஆழ்ந்து இருந்தார். இதனை அவதானித்த மன்னன் தனக்கு மரியாதை கொடுக்காது அமர்ந்திருக்கின்றார் என எண்ணி பட்டரைக் கடிந்து கொண்டான். பட்டரோ மன்னனின் பேச்சுக்கு அடிபணியாதவராய் அமர்ந்திருக்கிறார் என கருங் கோபமுற்ற சரபோஜியார் பட்டரை நோக்கி இன்று என்ன திதி என்று வினாவ எடுத்த எடுப்பில் பௌர்ணமி என்று பதில் அளித்தார். மன்னரோ அதனைக் கேட்டுத் திகைத்துக்கோபமடைந்தார். காரணம் அன்றைய தினம் முழு அமாவாசையாகும், அவருடைய மந்திரிமாரும் பட்டரைப் பித்தர் என்றும், பைத்தியக்காரர் என்றும் வசைபாடினர்.

அம்பாளும் மன்னரையும் மந்திரி மாரையும் ஆட்கொள்ள விரும்பியவளாய் பட்டரின் மனமெல்லாம் நிறைந்தவளாகி, மன்னரே! இன்று பௌர்ணமியே என்று மீண்டும் வாதிடச் செய்தார் அபிராமிப் பட்டர்! மன்னரோ பட்டரை நோக்கி இன்று பௌர்ணமி என்பதனை நிரூபிக்கும்படி வேண்டிக் கொண்டார். பட்டரும் சரி என்று அம்பாளை மனம் உருகும்படி தியானிந்து, தீ மூட்டி , அதற்குமேலே (100) நூறு நூலினால் தாங்கும்படி ஊஞ்சல் கட்டி பாடத் தொடங்கினார். அம்பாள் முன்பாக ஒவ்வொரு பாடலாகப் பாடி முடிக்கும் போது, ஒவ்வொரு நூலாக வெட்டிக் கொண்டார். இன்று பௌர்ணமியே என்ற தீராத பக்தியினால் கணபதி காப்போடு முதலில் பாடிய பாடல் நெஞ்சை விம்மச் செய்கின்றது.

*"உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மவர்க் கமலை துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோய மென்ன விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே!"*

தீ பற்றி மூண்ட வண்ணம் இருக்க, மன்னனும் பரிவாரங்களும் அதிசயமாய் பார்த்திருக்க, ஊரே திரண்டிருக்க, இயற்கையும் ஆதரித்திருக்க,அம்பாளுக்கு அரோகரா நாமம் பொலிந்திருக்க, அமாவாசை இருட்டு அகலா வண்ணம் செறிந்திருக்க, வானவரும் கீழிறங்கி வருகை தந்து வாழ்த்துரைக்க பட்டருக்குத் தண்டனை வழங்குவதற்காக ஏவலாளிகள் ஆர்ப்பரிக்க, பட்டரின் தீராத பக்தியில் பாடலும் உதிக்கிறது. நூலும் வெட்டப்படுகிறது. அம்பாளின் ஆபரணங்களோ அமாவாசையைத் தின்று கொள்கின்றன. எழுபத்தெட்டாவது நூல் வெட்டப்படுகிறது. எழுபத்தொன்பதாவது பாடல் பட்டரின் வாயிலே ஆராத பக்தியோடு பாடப்படுகிறது. நிலம் நீர் தீ காற்று ஆகாயம் பொங்குவதுபோல் இயற்கை கொந்தளிக்கிறது.

"பாழ்நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனி" என்று பாடி முடித்தபோது அமாவாசை சிதறும்படியாக அம்பாள் தனது மூக்குத்தியைக் கழற்றி வானத்தில் எறிந்தாள். பௌர்ணமி ஒளி எங்கும் பிரகாசமானது.

மன்னனும் பரிவாரங்களும் பட்டரின் காலடியில் வீழ்ந்து வணங்கினர். மன்னிப்புக் கேட்டனர். பட்டரின் என்றுமே அகலாத பக்தியை மெச்சிய அம்பாள் தொடர்ந்து நூறு பாடல்களையும் பாடிப் பரவுமாறு காட்சி கொடுக்க. பட்டரும் அம்பாளின்கட்டளையைப் பணிவோடு ஏற்று நூறு பாடல்களையும் பாடி நிறைவு செய்தார். முதலாவது பாடலின் தொடக்கமானஉதிக்கின்ற என்ற சொல்லேதான், நூறாவது பாட லின் முடிவாகவும் வருகிறது. என்னே அதிசயும்!

*"குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கை வல்லி கழையைப் பொருத திரு நெடுந்தோளும் கருப்பு வில்லும்விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெள் நகையும்உழையப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே"*

ஒவ்வொரு வீட்டிலும் படித்தவர்களும், பட்டம் பெற்றவர்களும், பதவியிலுள்ளோரும், மேடைப் பாத்திரசாலிகளும்,புத்திசாலிகளும், புலமையாளர்களும், நாகரிக மானவர்களும் என்பதாகப் பலர் சௌகரியமாக இந்த பட்டரின் விழாவைப்பார்த்து பரவசமாக்கி அனுபவிக்க முடியவில்லையே என்று ஆலயங்கள் தவம் கிடக்கின்றன. அமாவாசை எம்மைவிட்டு இங்கு எப்போதுதான் நீங்கப்போகிறதோ? யாரறிவார்? ■

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# யானைப்பசிக்குச் சோளப்பொரி

தந்தை ஒருவர் மரணப்படுக்கையில் இருந்தார். தன் இரு புதல்வர்களையும் அழைத்தார்.

" என்னிடம் ஒரு பசு, ஒரு தென்னை மரம், ஒரு கம்பளிப்போர்வை ஆகியவையே சொத்தாக உள்ளன. இருவரும் பகிர்ந்து கொண்டு வாழுங்கள்" என்று சொல்லிவிட்டு இறந்து போனார். இருவரிலும் அண்ணன் ஆசை அதிகமானவன். தம்பிக்கு சொத்து எதனையும் கொடுக்காமல் தானே ஆயுள் வரை எல்லாவற்றையும் அனுபவிக்கத் திட்டம் போட்டான்.

"தம்பி இந்த 3 சொத்தையும் சரிசமமாகப் பகிர்வோம்" என்று தேனொழுகச் சொன்னான். அண்ணன் சொத்துகளை இப்படிப் பகிர்ந்தான்.

" இந்தப் பசுவின் முன் பக்கம் உனக்கு. பின் பக்கம் எனக்கு"

" தென்னையின் அடிப்பாகம் உனக்கு, மேல் பாகம் எனக்கு"

" போர்வை இரவில் மட்டும் எனக்கு, பகல் முழுதும் உனக்குத்தான்"

அப்பாவித் தம்பியும் தலையாட்டினான்.

தம்பி பசுவுக்கு உணவளிப்பான், அண்ணன் பால் கறந்து பயன் பெறுவான். தம்பி தென்னைக்கு தண்ணீர் பாய்ச்ச, அண்ணனோ தேங்காயைத் தனதாக்குவான். பகலில் வெப்பநேரத்தில் போர்வை சும்மாயிருக்கும், இரவுக்குளிருக்கு அது அண்ணனுக்கு பயன்படும். கடைசியில் சமமாகப் பிரிப்பது போல பாசாங்கு செய்து தன்னை அண்ணன் ஏமாற்றியதைத் தம்பி உணர்ந்தான். அவனும் தன் வேலையைக் காட்டத் தொடங்கினான்.

பகல் எல்லாம் போர்வையைத் தண்ணீருக்குள் ஊறவைத்தான். அதனால் இரவில் அண்ணனால் போர்க்க முடியவில்லை. அண்ணன் பசுவில் பால் கறக்கும் போது, அதன் மூக்கினுள் தும்பை நுழைத்தான், பசு பால் கறந்து கொண்டிருந்த அண்ணனுக்கு காலால் உதை விட்டது. தென்னை மரத்தில் அண்ணன் தேங்காய் பறிக்க ஏறிய போது அதன் அடிப்பாகத்தை தம்பி கோடரியால் தறிக்கத் தொடங்கினான். அண்ணன் பதறிப்போனான்.

" தம்பி, இனி இருவரும் சொத்துக்களை இணைந்து பராமரித்து, சேர்ந்தே பயனும் பெறுவோம் " என்று வழிக்கு வந்தான்.

இந்தக் கதையில் வருகின்ற அண்ணன் சட்டென்று ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்கவை அடிக்கடி நினைவூட்டுகின்றார். ஏனெனில் கட்சியின் சகல அதிகாரச் சுவையும் தனக்கே எப்போதும் கிடைக்கவேண்டும் என்பதே ரணிலின் கொள்கை. அதற்காக அவர் யாருடனும் கூட்டுச் சேரவோ, காட்டிக் கொடுக்கவோ தயங்க மட்டார். சொந்தக் கட்சியைக் கூட தன் பதவிக்காக மஹிந்தவிடம், ஒரு கோப்பை பிளேன் கோப்பிக்காக முன்னொரு தடவை காட்டிக் கொடுத்தவர் தான் ரணில். சகலவிதமான ராஜ தந்திரங்களையும் கரைத்துக் குடித்தவர் என நம்பப்படும் ரணில் விக்கிரமசிங்க, ஏராளமான தோல்விகளையே கட்சிக்காகப் பெற்றுக் கொடுத்தவர். எனவே ஆளுமை மிக்க தலைமை ஒன்றின் மூலமாகவே ஐ.தே.கவுக்கு உயிரூட்ட முடியும் என்று குரல்கள் எழுந்த போதெல்லாம், அதனை தன் அதிகாரத்தாலும், யுக்தியாலும் அடக்கி, இல்லாமல் செய்த கெட்டித்தனமும் ரணிலுக்குண்டு. பலமுறை இதே ஆசிரிய தலையங்கப் பகுதியில் ரணில் தலைமைக்காகச் செய்யும் தகிடுதத்தங்களை விலாவாரியாகச் சொல்லிவிட்டதால், இனியும் அதனை நீட்டி முழக்க அவசியமிருக்காது.

அப்படிப்பட்ட ரணிலுக்கு, சஜித் பிரேமதாஸ பெரும் தலையிடி. பெரும்பாலான உறுப்பினர்களும், அமைப்பாளர்களும், பங்காளிக் கட்சிகளும் சஜித்தான் ஐ.தே.கவின் தலைவராக வேண்டுமென அடம் பிடிப்பதால், ரணிலால் தலைமைப்பதவியை விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கட்சி எப்படிப்போனாலும் பரவாயில்லை சாகும்வரை தன் தலைமைப்பதவியைத் தக்க வைத்தே தீருவது என்று ரணிலும் பல காய்நகர்த்தல்களைச் செய்த வண்ணமே இருக்கின்றார். கடைசியாக பிரதித் தலைவர் பதவியை மீண்டும் சஜித்துக்கு கொடுப்பதனூடாக, யானைப் பசிக்கு சோளப்பொரியைப் போட்டு வாயை அடைக்கலாம் எனத் திட்டம் போட்டுள்ளார். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் தோல்வியோடு தன்னுடைய பிரதித் தலைவர் பதவியைத் தூக்கி எறிந்த சஜித், மீண்டும் அதே சோளப்பொரிக்கு அடங்கி விடக்கூடியவர் இல்லை. கட்சியின் பெரும்பான்மை ஆதரவும் இப்போது அவர் பக்கம் என்பதால், தலைமையத் தந்தே ஆகவேண்டும் என்று அவரும் மல்லுக்கட்டத்தான் செய்வார். கட்சியின் அடுத்த கூட்டத்தில் பெரும் பிரளயம் ஒன்று வெடிப்பது நிச்சயமாகிவிட்டது. ரணில் போடும் சோளப்பொரி வேலை செய்யுமா? இல்லை ரணிலுக்கே ஆப்படிக்குமா என்பது விரைவில் தெரிந்து விடும்.

கூட்டமைப்பு மீது சேறு பூச

# மாகாணசபை விவகாரத்தை கையிலெடுக்கிறது மொட்டு

## அவைத் தலைவர் சி.வீ.கே. சாடல்



**யாழ்ப்பாணம், ஜன. 24**

**நாம் கோரிய நிதியில் மூன்றிலொரு பங்கை வழங்கி விட்டு, அந்த நிதியையும் முழுமையாக விடுவிக்காது விட்டு, எமக்கு ஒதுக்கிய நிதிகளை நாம் திருப்பி அனுப்பியனுப்பியதாகப் பொய்ப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சேறு பூசவே மஹிந்த அணி இந்த விவகாரத்தைக் கையிலெடுத்துள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கடற்றொழில் நீரியல்வளங்கள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, வடக்கு மாகாண சபை ஒதுக்கப்பட்ட நிதிகளைத் திருப்பி அனுப்பியது என்று தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்த தகவல் முற்றிலும் தவறானது. அவர் நிதி ஆணைக்குழுவிடம் சென்று நான் கூறும் விவரங்களைச் சரிபார்த்து உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.
2017ஆம் ஆண்டு 10 ஆயிரத்து 674 மில்லியன் ரூபா தேவை எனக் கோரிக்கை விடுக்க 2 ஆயிரத்து 859 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு 10 ஆயிரத்து 310 மில்லியன் ரூபா தேவை எனக் கோரிக்கை விடுக்க 3 ஆயிரத்து 81 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 252 மில்லியன் ரூபா தேவை எனக் கோரிக்கை விடுக்க 3 ஆயிரத்து 303 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நாம் கோரியதன் மூன்றிலொரு பங்கு நிதியைக் கூட அவர்கள் ஒதுக்கவில்லை.
இதேவேளை, 2015ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தும் திட்டங்களுக்கு ஆயிரத்து 840 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அந்த நிதியில் ஆயிரத்து 797.82 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. 43 மில்லியன் ரூபா செலவிடப்படவில்லை. ஆனால் திருப்பி அனுப்பப்படவில்லை.
2016ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 3 ஆயிரத்து 713 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் 2 ஆயிரத்து 237 மில்லியன் ரூபா நிதியே அரசால் வழங்கப்பட்டது.
2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 4 ஆயிரத்து 733 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், 4 ஆயிரத்து 226 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 630 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 854 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் ஆயிரத்து 927 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டது.
வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட எந்தவொரு நிதியும் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.
வடக்கு மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடு வேறு. வடக்கு மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடு வேறு. வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி எமது திறமையான அதிகாரிகளால் உரிய வகையில் செலவு செய்யப்பட்டது. ஆனால் வடக்கு மாகாணத்துக்கு கொழும்பு அரசு, தனது அமைச்சுக்கள் ஊடாக ஒதுக்கிய நிதிகள் சில வேளைகளில் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கலாம். அதற்கு மாகாண சபை பொறுப்பாக முடியாது - என்றார்.
வடக்கு மாகாண சபை பதவியிலிருந்த காலத்தில் ஆளும் கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் சிலர், மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி- திரும்பிச் சென்றதாக சபை அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். நிதி திரும்பிச் செல்லவில்லை என்றால், மாகாணசபை உறுப்பினர்கள் அந்தக் கருத்துக்களை அரசியல் ரீதியாகவா சுமத்தியிருந்தனர் என்று கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்குப் பதிலளித்த அவைத் தலைவர், அவர்கள் (மாகாணசபை உறுப்பினர்கள்) தவறான தரவுகள், தகவல்களின் அடிப்படையில் அவ்வாறு கூறியிருக்கலாம் - என்றார். (ஒ.5,20)

# சாமானியர்களும் இனி அரசமைப்பை மீறலாம்

## விமலின் நடவடிக்கை அதையே பறைசாற்றுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 24
அமைச்சர் விமல் வீரவன்ச அரசமைப்பை மீறியுள்ளார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது சட்டமா அதிபர். ஆனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
மன்னாரில் திறந்து வைக்கப்பட்ட பனைதும்பு உற்பத்தி தொழிற்சாலையின் பெயர்ப் பலகையில் தமிழுக்கு முதலிடம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான ஒளிப்படத்தை விமல் வீரவன்ச தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். அதற்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டமையைத் தொடர்ந்து பெயர்ப் பலகை மாற்றப்பட்டது. அதில் சிங்கள மொழிக்கு முதலிடம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.
'அரசமைப்பின் 16ஆவது பிரிவில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ் மொழிக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும். விமலின் செயற்பாடு வெளிப்படையாக அரசமைப்பை மீறும் நடவடிக்கையாகும். அரசமைப்பை மீற மாட்டேன் என்று சத்தியப்பிரமாணம் எடுத்த விமல்வீரவன்ச அதனை மீறியுள்ளார். இதனூடாக சாதாரண மக்களும் அரசமைப்பை மீற முடியும் என்ற எடுத்துக்காட்டையே அவர் வழங்கியுள்ளார்' என அவைத் தலைவர் குறிப்பிட்டார். (ஒ.5)



# தமிழக மீனவர்களால் வடக்குக்கே பாதிப்பு!

## நிரோஷன் பெரேரா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.24

**இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து கடற்றொழிலில் ஈடுபடுகின்றமையால் வடக்கு மீனவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பல வருடங்களாக விவாதிக்கின்றோம். ஆனால், இன்னும் அப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படவில்லை.

இதனால் வடக்கு மீனவர்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதும், பின்னர் விடுதலை செய்யப்படுவதுமே நடக்கின்றது.

இனியாவது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். இந்த விவகாரத்தை கடற்றொழில் அமைச்சால் தனித்துக் கையாள முடியாது என்பதும் தெரியும் ஜனாதிபதி மற்றும் இந்திய மத்திய அரசுடன் இணைந்து இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வை காண முயற்சிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார். (ஏ-44)

## பஸில் வந்த பின்னரே சின்னம் பற்றி முடிவு

### சு.க. பொதுச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.24

சிறிலங்கா பொதுஜன பெரமுனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கும் பரந்துபட்ட கூட்டணியின் சின்னம் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் தீர்மானிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது சுதந்திரக் கட்சியில் உள்ள அனைவரும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து விட்டனர் என்று அண்மையில் எஸ்.பி.திஸாநாயக்க கூறியிருந்தார்.

சுதந்திரக் கட்சியில் இருந்து எவரும் சிறிலங்கா பெரமுனவுடன் இணைந்து கொள்ளவில்லை. கட்சி அவ்வாறே உள்ளது. நாம் அதனை வழிநடத்திக் கொண்டிருக்கின்றோம். கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் எங்களுடன் தான் உள்ளனர். நாம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் தேர்தல் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம்.

பொதுத் தேர்தலில் சின்னம் ஒரு பிரச்சினையாக அமையாது. பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் சின்னம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். உருவாக்கப்பட்டுள்ள "சிறிலங்கா நிஹஸ் பொதுஜன சந்தான" என்ற கூட்டணியைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் விரைவில் எடுக்கப்படும்-என்றார். (ஏ)

## இலங்கை – துருக்கியிடையே இரட்டை வரி நீக்க ஒப்பந்தம்

கொழும்பு, ஜன.24

இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையே வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையைவிருத்தி செய்யும், ஊக்குவிக்கும் நோக்கில் இரட்டைவரியை நீக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது என்று தேசியவருமானத்திணைக்களத்தின் ஆணையாளர் நதுன் குருகே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இதுவரை 45 நாடுகளுடன் இரட்டை வரி நீக்கும் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளது.

இந்த முறைமை மிகவும் வெற்றியளித்துள்ளது.

இந்த வார இறுதிக்குள் துருக்கியுடனும் இரட்டை வரி நீக்க உடன்படிக்கையைக் கைச்சாத்தித் திட்டமி டப்பட்டுள்ளது துருக்கி யுடனான உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக நான் உட்பட தேசியவருமானதிணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவொன்று இலங்கையிலிருந்துதுருக்கிக்குச் சென்றது.

1950ஆம் ஆண்டு பிரித்தானியாவுடன் முதன்முறையாக இரட்டை வரி நீக்க உடன்படிக்கையை இலங்கைசெய்துகொண்டிருந்தது. அன்று தொடக்கம் இன்றுவரை சுமார் 46 நாடுகளுடன் மேற்படி உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளோம். துருக்கியை போன்று மேலும் சில நாடுகளுடன் எதிர்காலத்தில் இரட்டை வரிநீக்க உடன்படிக்கையை கைச்சாத்திட்டு போட்டி மிக்க வர்த்தகச் சூழலூடாக இலங்கைக்கு நன்மைகளை ஈட்டிக்கொள்வது அரசின் எதிர்பார்ப்பாகும்- என்றார். (ஏ)

## பெருந்திருவிழா

காரைநகர், ஜன.24

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் தேர்த்திரு விழா பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

### ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்:

# பன்னிருவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜன. 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதானோரில் 12 பேரைஎதிர்வரும்பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றுநேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

குறித்தவழக்குகல்முனை நீதிமன்றநீதிவான்ஐ.என். றிஸ்வான்முன்னிலையில் விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணைக்காக வந்த சந்தேகநபர்கள் அனைவரும் பல்வேறுசந்தர்ப்பங்களில் குற்றப்பு லனாய்வு பிரிவு மற்றும்பாதுகாப்புத்தரப்பினர்களால் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். மேற்குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான பிணை கோரிக்கை குறித்துசட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளஅதேவேளை நேற்று பொலிஸாரின் ஆட்சேபனை காரணமாக அனைத்து சந்தேக நபர்களதும் விளக்க மறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ்வழக்கு விசாரணை எதிர்வரும்பெப்ரவரிமாதம் 3ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுகைதானசந்தேக நபர்கள் அனைவரும்காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.



கடந்த சில வாரங்களாக குறித்ததாக்குதல்சம்பவத்துடன் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்ட மேற்குறித்த இடங்களைச் சேர்ந்த அனைவரும் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தபின்னர் மீண்டும் நேற்று விசாரணைக்காக ஆஜர்படுத்தப் பட்டமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## ஹயஸ் விபத்து 9 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.24

ஹயஸ் வாகனத்தின் வில்லுத்தகடு உடைந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து சங்குப்பிட்டி வீதியில் உள்ள ரயில் கடவைக்கு அண்மையில் நேற்று முந்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வாகனத்தின்வில்லுத்தகடுஉடைந்ததாலேயே விபத்து நிகழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தின் சாரதி படுகாயமடைந்தார். அதில் பயணம்செய்த 8 பேரும் காயமடைந்தனர். அவர்கள் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பூநகரிப் பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-21)

## கழுகால் ஏற்பட்ட விபரீதம்

ஹட்டன், ஜன. 24

ஹட்டன் டிக்கோயா, வனராஜா மேற்பிரிவு தோட்டத்தில் பெண் தொழிலாளியொருவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் கிளங்கன் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவருகிறார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

மரமொன்றில் இருந்த குளவிக் கூடுமீது வேகமாக பறந்துவந்த கழுகு மோதியால் அந்தக் கூடு கழன்று, மரத்துக்கு கீழே கொழுந்து கொய்துகொண்டிருந்த பெண் தொழிலாளியின் தலையில் விழுந்தது. அதன் பின்னர் கலைந்த குளவிகள் அவரைச் சரமாரியாகக் கொட்டின என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ.5.44)

# கூட்டமைப்பின் உருவாக்கம் சித்தார்த்தனுக்கு தெரியாது

## கூறுகிறார் சி.வீ.கே.

யாழ்ப்பாணம், ஜன. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்களை, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனுக்குத் தெரியாமலிருக்கலாம் என்று, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லை என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், தொலைக்காட்சி நேர் காணலில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே, அவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இதேபோன்றதொரு கருத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வெளியிட்டிருந்தார். கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதும் அது தொடர்பான தகவல்கள் அப்போது திருகோணமலைக்குப் போகவில்லை. இதே போன்று கூட்டமைப்பு உருவாக்கப்படும்போது சித்தார்த்தனும் அதில் உள்வாங்கப்படவில்லை. அதனால் அவருக்கும் தெரியாமல் இருக்கலாம். 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அமோக வெற்றியீட்ட தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம்' - என்றார் சி.வீ.கே. (ஒ,5)

# காணிகளை விடுவிக்குமாறு மஹிந்த, கோத்தாவுக்கு மனு

## வடக்கு ஆளுநர் ஊடாக அனுப்பிவைப்பு



முல்லைத்தீவு, ஜன. 24

தமது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி முல்லைத்தீவின் கேப்பாப்பிலவு மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு வழங்க வென்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸிடம் நேற்றுமுன்தினம் மனுக்களைக் கையளித்துள்ளனர்.

ஏற்கனவே காணி விடுவிக்கப்பட்ட மக்கள் சார்பாகவும், காணி விடுவிக்கப்படவேண்டிய மக்கள் சார்பாகவும் மனுக்கள் கையளிக்கப் பட்டுள்ளன.

ஏற்கனவே காணிகள் விடுவிக்கப் பட்ட மக்கள் சார்பில் வழங்கப்பட்ட மனுவில், குறிப்பிட்டளவு மக்களின் காணிகளேவிடுவிக்கப்பட்டுள்ளன. தாம் பலத்த இடர்பாடுகளுக்குள் உள்ளோம். பயந்த சூழ்நிலையில் வாழ்கின்றோம். விடுவிக்கப்படாத மிகுதிக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

காணிகள் விடுவிக்கப்படவேண்டிய மக்கள் சார்பில் வழங்கப்பட்ட மனுவில், எமது காணிகள் விரைவில் விடுவிக்கப்படவேண்டும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது காணிவிடுவிப்புத் தொடர்பில் நல்லதொரு பதிலை வடக்கு ஆளுநரிடமிருந்து எதிர் பார்க்கின்றோம்.

ஆளுநரிடமிருந்து முறையான தொரு பதில் கிடைக்காதுவிட்டால், தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுப்போம்.

காணி விடுவிப்புக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியுடன் மூன்று வருடமாகின்றது. அதற்குள் ஆளுநரிடமிருந்து நல்லதொரு பதில் கிடைக்காதுவிட்டால் மார்ச் மாதம் முதலாம் திகதி பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்தனர். (த-246)

# நாளை மின்தடை

மின் விநியோக மார்க்கக் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் சில பகுதிகளில் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்தடைப்பட்டிருக்கும்.

**யாழ்.பிரதேசத்தில்** சுழிபுரம், பத்தானைகேணியடி, மாவடி, மூளாய், கே.எம்.கே. சீ பூட்ஸ், சொலிட் வேஸ்டேஜ், டிஸ் போசல் கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை. மாவைகலட்டி, கீரிமலை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும், **வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத் வத்த கிராமம், பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரைக்கும், மெனிக்பாம் I,II, III மற்றும் IV ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் பல்மேரா கெளவுஸ், தலைமன்னார் மருத்துவமனை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, நியூ சில்க் றோட், தோட்டவெளி, ரிமிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை, இன்ரஸ்ரியல் எஸ்ரேட் 1,2 ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மன்னார் வயல்களிலும் கபில தத்தியின் தாக்கம்

மன்னார்,ஜன.24

மன்னார் மாவட்டத்தில் 2019 2020 கால போக நெற்செய்கையில் கபில நிறத் தத்தியின் தாக்கம் அதிகமாக அவதானிக்கப் பட்டுள்ளது.

அடம்பன், ஆட்காட்டிவெளி, நானாட்டான், முருங்கன் போன்ற விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இதன் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

எனவே விவசாயிகள் விழிப்பாக இருப்பதுடன், உரிய தடுப்பு முறைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் விவசாயத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அதிகளவு யூரியா பாவனையைத் தவிர்த்தல், வயலின் நீர் மட்டத்தைக் குறைத்தல், சிறந்த பயிர் சுகாதாரத்தை மேற்கொள்ளல், தேவையற்ற இரசாயனங்கள் பாவிப்பதைத் தவிர்த்தல், சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளை சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் விசிறல் உள்ளிட்ட முறைகளைப் பின்பற்றுமாறு மன்னார் மாவட்ட விவசாய திணைக்களத்தினர் கேட்டுள்ளனர். (க-213)

# காரைநகரில் புதிய பயிற்சி நெறிகள்

## சரா எம்.பி. ஆரம்பித்து வைப்பார்

காரைநகர்,ஜன.24

யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 4 கற்கைநெறிகள் காரைநகரில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காரைநகரில் உள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் தையல் பயிற்சி, அழகுக்கலை, சிங்களம், ஆங்கிலம் ஆகிய 4 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு கற்கை நெறிகளை ஆரம்பித்து வைப்பார் என்று காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் ஆண்டிஐயா விஜயராஜா தெரிவித்தார்.

காரைநகரில் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பித்த மற்றும் விண்ணப்பிக்காதவர்களும் அன்றையதினம் காரைநகரில் உள்ள தமிழரசு கட்சி பயிற்சி நிலைய காரியாலயத்துக்கு வருகை தந்து பயிற்சியில் இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## 'சார்ப்' நிறுவனத்தால்

# 21,173 வெடிப்பொருள்கள் வன்னியில் மீட்டு அழிப்பு

கிளிநொச்சி, ஜன. 24

வடக்கில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 9லட்சத்து 69ஆயிரத்து 670 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியில் 21 ஆயிரத்து 173 வெடிப்பொருள்கள் அகற்றி அழிக்கப்பட்டுள்ளன என்று மனித நேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான 'சார்ப்' தெரிவித்தது.

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் முகமாலை மற்றும் கிளாலி போன்ற பகுதிகளில் ஜப்பான் நாட்டு அரச நிதிப் பங்களிப்புடன் மனித நேயக்கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை 'சார்ப்' மேற்கொண்டுள்ளது என்று அந்த நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பவ தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிகளை அண்மித்த கிராமங்களிலுள்ள இளையோர் மூலமாக மனித நேயப்பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகள் இந்த ஆண்டும் முகாமாலை மற்றும் கிளாலி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் சொந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு மிகப்பெரும் ஆபத்தாக விளங்கியது, நிலக்கீழ் புதைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள்களே. இவற்றை அகற்றி அழித்து மக்கள் சொந்த நிலங்களில் மீளக்குடியமர பல சர்வதேச மனித நேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களும் பல உள்ளூர் மனித நேயக் கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களும் தங்களுடைய மனிநேயப்பணிகளை வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொண்டுள்ளன. (த-6)



# ரூ.75 ஆயிரம் தண்டம்



சாவகச்சேரி,ஜன.24

சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவையின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து மூன்று குற்றங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம், 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# மஹிந்த-கோத்தாபய இடையில் மோதலா?

## பாதுகாப்பு அமைச்சரை நியமிக்க பின்னடிப்பது ஏன் என ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, ஜன.24

பாதுகாப்பு அமைச்சுப் பதவியை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அச்சப்படுவது ஏன்?. அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையே மோதல் வெடித்துவிட்டதா? உண்மையில் நடப்பது என்ன?

இவ்வாறு சபையில் நேற்று கேள்விக் கணைகளைத் தொடுத்தார் ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு அமைச்சுப் பதவி எவருக்கும் கையளிக்கப்படாத நிலையில், மக்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்புக் கூறுவது என்பது தொடர்பில் அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் புதிய அரசு பதவியேற்றதுடன் அமைச்சரவையும் நியமிக்கப்பட்டது. ஆனால் பாதுகாப்பு அமைச்சர் யார் என்பது தொடர்பில் இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. பாதுகாப்பு அமைச்சுப் பதவி எவருக்காவது வழங்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பு வெளியாகியிருக்க வேண்டும். அத்தகைய அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை ஜனாதிபதி வகிக்க முடியாது. அமைச்சரவையிலுள்ள ஒருவருக்கு அந்தப் பதவி வழங்கப்படவேண்டும். பாதுகாப்பு அமைச்சர் யார் என்பதை அரசு அறிவிக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சர் இல்லாமல், அந்த அமைச்சுக்கு எவ்வாறு செயலாளரை நியமிக்க முடியும்?.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இருந்தாலும் அவர் அமைச்சரவைக்குப் பொறுப்புக் கூறமுடியாது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என கூறப்பட்டது. ஆனால் இன்னும் வழங்கப்படவில்லை.


வர்த்தமானியும் வெளியாகவில்லை. போர்காலத்தில் மஹிந்தராஜபக்ஷவே பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்டார்.

அவரின் தம்பியான கோத்தாபய ராஜபக்ஷ செயலாளர் பதவியை வகித்தார். தற்போது அண்ணன், தம்பிக்கிடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா?. அவ்வாறு இருக்கலாம் எனத் தற்போது கதை அடிபடுகின்றது. மக்களின் பாதுகாப்பு முக்கியம். அதற்குப் பொறுப்புக் கூற ஒருவர் இருக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் யார் என்பதை அரசு உடன் அறிவிக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகின்றேன்- என்றார். (எ-44)



தேசிய மட்ட "செயற்பட்டு மகிழ்வோம்" போட்டியில் பங்குபற்றிய கிளிநொச்சி விவேகானந்தா பாடசாலையின் இரு அணிகளில் தரம் 3 பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தையும், தரம் 4 ஆண்கள் அணி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன. (க-222)



தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச மக்களுக்கான இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் உட்பட பெருமளவு மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (க-9)

## தனியார் மருத்துவமனை கணக்கெடுப்பு மே மாதம்

மருத்துவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளைக் கணக்கெடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கணக்கெடுப்பு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும்.

மருத்துவர்களின் பெயர்களில் உள்ள தனியார் மருத்துவ நிலையங்கள் 2017ஆம் ஆண்டே இறுதியாகக் கணக்கெடுக்கப்பட்டன. 657 மருத்துவமனைகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

உரிய தரத்தைப் பின்பற்றாத தனியார் மருத்துவமனைகளால் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## சொற்பொழிவு

நீர்வேலி, ஜன.24

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்றுவரும் வாராந்த சமயச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.45மணிக்குநடைபெறும். நிகழ்வில் "அபிராமிப் பட்டர்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ தியாக ராஜமயூரகிரிகுருக்கள் சொற்பொழிவாற்றுவார். (க-17)

## உடைமையில் கஞ்சா: ஒருவருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜன.24

4 கிலோ கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, தென்மராட்சி தெற்கு மறவன்புலோப் பகுதியில் வைத்து கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன், சந்தேகநபரை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அந்த நபரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-9)

## கருணைவிழா

கொடிகாமம், ஜன.24

அபிராமி அன்னையின் கருணைவிழா தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். கலைஞானி கே.ரீ.குமரநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக சைவப்பெரியார் கணபதி துரைசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சைவப்பெரியார் நமச்சிவாயம் விமலராசா ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் சமயச் சொற்பொழிவுகள், மாணவர்களின் கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல், விருந்தினர் கௌரவிப்புஉள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறும். அத்துடன் சிறப்பு நிகழ்வாக நூறு கயிறுகளாலான திருவூஞ்சலில் அபிராமிப் பட்டரை அமர்த்தி அபிராமி அந்தாதி முற்றோதல் மற்றும் பக்தோற்சவம், மகேஸ்வரபூசை என்பனவும் நடைபெறும். (க-159)

## சிவப்பு எச்சரிக்கை

வவுனியா, ஜன.24

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட காணிக்கு, சுகாதார மருத்துவ அதிகாரிகள் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் காணியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட காணிக்கு சுகாதார மருத்துவ அதிகாரிகள் சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

"இங்கு டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. இது உங்களுக்கும் அயலவர்களுக்கும் ஆபத்தானது. எனவே




உங்கள் வளாகத்தில் உள்ள அனைத்து நுளம்பு பெருகும் இடங்களையும் அகற்றி, நுளம்பு பெருகும் இடங்கள் இல்லை என்பதை மூன்று நாள்களுக்குள் உறுதிப்படுத்தவும். அறிவித்தலை அலட்சியம் செய்யும் பட்சத்தில் உங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-18)

## பரிசளிப்பு விழா

முல்லைத்தீவு,ஜன.24
புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு ஆகிய நூலகங்களால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா மற்றும் கோட்டக்கல்வி அலுவலர், பாடசாலை முதல்வர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வர். (க-19)

# 19ஐ இல்லாது செய்ய ஏன் துடிக்கிறது அரசு?

## கிரியெல்ல எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜன.24
19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு என்ன நோக்கத்துக்காக இல்லாது செய்ய முற்படுகின்றது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
18ஆவது திருத்தச் சட்டம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுழுமையானஅதிகாரம் கொண்ட ஒருவராக இருந்தார். இதன் ஊடாக அவர் நீதிமன்றங்களுக்குக் கூட அழுத்தம் பிரயோகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அதை இல்லாது செய்யும் நோக்கில்தான் 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.
அதில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன, அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன, சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டமூலம் தொடர்பாக ஒரு நாள் முழுவதும் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட்டது. அனைவரின் ஒப்புதலுடனும் அது நிறைவேற்றப்பட்டது.
தற்போது அதை ஏன் எதிர்க்கின்றார்கள் எனத் தெரியவில்லை. அதேவேளைதங்களின்வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று அரசு தற்போது கூறிக் கொண்டிருக்கின்றது.
அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்கவும், ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்கவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை. எமது 100 நாள் அரசில் நாம் பெரும் வேலைத் திட்டங்களைச் செய்திருந்தோம். இந்த அரசு தற்போது தடுமாற்றத்துடன்தான் ஆட்சி செய்கின்றது-என்றார். (எ)

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி,ஜன.24
மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.
அதிபர் திருமதி.ஜெ.தேவேஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர் சி.சிவதாசன், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி. இ.மயில்வாகனசிங்கம், நலன்விரும்பி ந.இ்ராஜமோகன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

## 100 ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
தலைவர் ச.நிமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டக்கல்லூரி பீடாதிபதி கு.குருபரன் ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சிதாகாசாநந்தா மற்றும் யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் நிகழ்த்துவர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# மாணவர்களுக்கான தானியங்கி வங்கி

## கிளிநொச்சியில் அறிமுகம்



கிளிநொச்சி.ஜன.24
பாடசாலை மாணவர்களுக்கான தானியங்கி வங்கிச் சேவை வடக்கு-கிழக்கில் முதன் முதலாக கிளிநொச்சியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நேற்று அறிமுக நிகழ்வு நடைபெற்றது.
மக்கள் வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பசுமை வங்கியியல் எனும் எண்ணக்கருவில் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 13 பாடசாலைகளில் தானியங்கி வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 14 ஆவது சேவை வடக்கு- கிழக்கில் முதன் முதலாக கிளிநொச்சி மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
தானியங்கி இயந்திரத்தைக் கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் மாணவர்களைக் கொண்டு திறந்து வைத்தார்.
தொடர்ந்து மாணவர்களால் பணம் வைப்புச் செய்யப்பட்டது. பணம் வைப்பு செய்த மாணவர்களுக்கு பரிசுகள் வங்கியினரால் வழங்கப்பட்டன. (க-222)

# குடை சாய்ந்தது கனரக வாகனம்



வவுனியா,ஜன.24
வவுனியா - தாண்டிக்குளம் ஏ/9 வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கனரக வாகனம் குடை சாய்ந்தது.
கொழும்பில் இருந்து யாழ்.நோக்கிச் சென்ற கனரக வாகனம் தாண்டிக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது மாடு குறுக்கே சென்றதால் விபத்து நடந்துள்ளது.
விபத்தில் வாகனம் குடை சாய்ந்தது. எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. வாகனத்துடன் மோதிய மாடு உயிரிழந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110,18)

# தங்கத்துடன் மூவர் கைது



கொழும்பு, ஜன.24
தங்கத்தை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 5 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அவற்றின் பெறுமதி சுமார் 5 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# சுதந்திரக் கட்சியினரை பெரமுன மதிப்பதில்லை

## மரிக்கார் கிண்டல்

கொழும்பு, ஜன.24
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் மதிப்பதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஐக்கியதேசியக்கட்சியின்ஆதரவாளர்கள் வாக்களித்து உருவாக்கிய அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுச் சொகுசுகளை அனுபவித்து விட்டு சுதந்திரக் கட்சியினர் இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டனர்.
அவ்வாறு செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது செயல்களுக்கான பலனைத் தற்போது அனுபவிக்கின்றனர். அவர்களை சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் மதிப்பதில்லை.
எதிர்வரும் தேர்தலில் தோல்வியடைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வீட்டிலேயே ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தும் நிலை ஏற்படும் - என்றார். (எ)

# தமிழர்கள் கோத்தாவுக்கு ஏன் வாக்களிக்கவில்லை?

## *காரணங்களை பட்டியலிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு*

ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ் மக்கள் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஏன் வாக்களிக்கவில்லை என்பதற்கான காரணங்களை சபையில் நேற்றுப் பட்டியலிட்டுக் காட்டி உரையாற்றினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன்.

தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லையே என்று ஆக்ரோஷமடையாமல் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து பரிகாரம் செய்யும் நடவடிக்கையில் இறங்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையின மக்கள் கோத்தாபயவுக்கு வாக்களிக்கவில்லை என்ற வாதத்தை ஒருபோதும் ஏற்கமுடியாது. 50 வீதத்துக்கும் மேல் என்ற அறுதிப் பெரும்பான்மையை எட்டுவதற்கு தமிழ் பேசும் மக்களின் வாக்குகளும் உதவின.

7 அல்லது 8 சதவீதமான வாக்குகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு தரப்பை முன்னிலைப்படுத்தி மற்றையை தரப்பை ஓரங்கட்டும் வகையில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்கக்கூடாது. ஆனால் நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கையில் ஒரு தரப்பை முன்னிலைப்படுத்தும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று கோரப்படுவது அடிப்படைவாதச்செயல் என்று சித்திரிக்கப்படுகின்றது. வீண் செலவு என்று குறிப்பிட்டு தேசிய பொங்கல் விழாக்கூட நடத்தப்படவில்லை.

1956 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்க அதே ஆண்டு தனிச் சிங்கள அரச கருமமொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். 1957 இல் செல்வா பண்டா ஒப்பந்தம். கைச்சாத்திடப்பட்டாலும் கடும் எதிர்ப்புக் காரணமாக அது கிழித்தெறியப்பட்டது. 1958இல் இன வன்முறை ஏற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை விரட்டவேண்டும் என்பதற்காக சிங்கள மொழியை பண்டாரநாயக்க முன்னிலைப்படுத்தியதால் தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான உறவில் அது பாரதூரமான இடைவெளியை ஏற்படுத்தியது. மீண்டும் அந்த யுகத்தை நோக்கிப் பயணிக்கப் போகின்றோமா? அதேவேளை, சிறுபான்மையின மக்கள் ஏன் வாக்களிக்கவில்லை என்று சிந்திப்பதைவிடுத்து, ஆக்ரோஷப்படும் வகையில் செயற்படுவது மீண்டும் விபரீதம் ஏற்படுவதற்கே வழிவகுக்கும்.

மிருசுவில் படுகொலை என்பது பாரதூரமானது. அதனுடன் தொடர்புடைய படைத் தரப்பைச் சேர்ந்தவர் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்படுகின்றார். இது தமிழ் மக்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையா? ஆனந்த சுதாகரன் என்ற தமிழ் அரசியல் கைதி இருக்கிறார். மனைவியின் இறுதிக்கிரியைக்கு வந்தபோது பிள்ளைகள் அவரைப் பிடித்துக்கொண்டனர். மீண்டும் சிறைக்குச் செல்லவேண்டாம் எனக் கோரினர். தந்தை விடுதலை செய்யப்படுவார் என அந்தப் பிள்ளைகளிடம் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார்.

ஆனால் விடுதலை செய்யப்படவில்லை. தாயும், தந்தையும் இல்லாமல் அவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். எனவே, பொதுமன்னிப்புக்கூட ஒரு தரப்புக்கா? போர் முடிவடைந்த பின்னர், ஆயுதப் பிரச்சினைக்கு ஆயுதம் மூலம் தீர்வு, அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் பேச்சுமூலம் தீர்வு என்று மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். போருக்குப் பின்னர் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலோ, கைதிகள் விடயத்திலோ காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அரசியல் தீர்வும் காணப்படவில்லை. இவ்வாறான விடயங்களால்தான் தமிழ் மக்கள் இம்முறை வாக்களிக்க வில்லை. அதற்காக ஆவேசம் அடைவதை விடுத்து, பரிகாரத்தைக் காணவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நல்லிணக்கம் என்பது பேச்சளவில் மட்டுமே இருக்கும் - என்றார். (ஒ.5,44)

# 19ஆம் திருத்தத்தை ஒழிக்க ஒத்துழைக்காது ஐ.தே. கட்சி

## *பாலித ரங்கே பண்டார எம்.பி. திட்டவட்டம்*



**கொழும்பு, ஜன.24**

**நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு உதவிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது. அந்தத் திருத்தத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளத்தக்க அனைத்துச் செயற்பாடுகளையும் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளரர்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஜனநாயக இடைவெளியொன்றை ஏற்படுத்தும் விதமாகவே நாம் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினோம்.

ஆனால் தற்போது பதவியேற்றிருக்கும் புதிய அரசு ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்திய 19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறி வருகிறது. அதன்மூலம் நாட்டில் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட ஏகாதிபத்தியவாத ஆட்சிமுறையொன்றையும், ஏகாதிபத்திய தலைமைத்துவத்தையும் நோக்கி மீண்டும் நகர்வதற்கு முற்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகிறது. தற்போதுவரை யாரும் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மாத்திரமே சத்தியப்பிரமாணம் செய்திருக்கிறார். எனவே நாட்டில் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாத நிலையேற்பட்டிருக்கிறது. - என்றார். (எ)

# அரசின் நடவடிக்கைகள் இன ரீதியாகவே உள்ளன

## *ரிசாத் பதியுதீன் குற்றச்சாட்டு*



கொழும்பு, ஜன.24

அரசின் சில நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அது இன ரீதியாகச் செயற்படுவதாகவே தோன்றுகின்றது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்டச் செயலராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டார். சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர், மன்னார் அரச அதிபராக இருந்த முஸ்லிம் ஒருவர் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர், வவுனியாவில் முஸ்லிம் ஒருவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது.

மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இந்த மாவட்டத்தில் பணிபுரிந்த இஸ்லாமியர் திடீரென இடமாற்றப்பட்டது ஏன்? இவர் செய்த குற்றம்தான் என்ன? இல்லாவிடின் முஸ்லிம் என்ற காரணத்துக்காகவா இவ்வாறு நடத்தது? பல்லின மக்கள் வாழும் நாடு என்று எம்மைப்பற்றி வெளிநாடுகளில் பெருமையாக பேசும் நீங்கள் இந்த நாட்டிலே அதனைச் செயலில் காட்டுகின்றீர்களா? மாவட்டச் செயலரை அவசரமாக இடமாற்றியதை நீங்கள் சாதனையாக கருதுகின்றீர்களா? திருமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களிள் முஸ்லிம் சமூகம் பெருவாரியாக வாழ்கின்றது. இலங்கை நிர்வாக சேவையில் தகுதி பெற்ற சுமார் இருபதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இருக்கின்றனர்.

வீதாசாரப்படி மூன்று பேர் நியமிக்கப்படவேண்டும். ஆகக்குறைந்தது அம்பாறை மற்றும் திருமலையிலாவது முஸ்லிம் அரச அதிபர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக இருந்தவரையும் இடமாற்றி இருப்பது நியாயமா? இது பழி வாங்கலா?. இந்த இட மாற்றம் ரத்துச்செய்யப்பட வேண்டும்

வவுனியா பம்பைமடு குப்பை பிரச்சினை தொடர்ந்தும் தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது. 4 மாதங்களுக்கு முன்னர் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படாததால் குப்பை மேட்டை அண்டி வாழும் மக்கள் துன்பத்தில் வாழ்கின்றனர். அதனால்தான் இப்போது ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். மக்கள் ஆணையை மதித்தே இந்த அரசுக்கு ஆட்சியை வழங்கினோம். எனினும் பழிவாங்கல் இடம்பெறுகிறது. - என்றார். (எ)

# தொழிலாளர்கள் போராட்டத்தால் சுத்திகரிப்புப் பணிகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஜன 24

யாழ்.மாநகர சபைத் சுகாதார தொழிலாளர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் மாநகரப் பிரதேசத்தின் சுத்திகரிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை கடந்த புதன்கிழமை ஆரம்பித்தனர். மாநகராட்சி மன்றத்தின் நுழைவாயிலில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். தமது கோரிக்கைக்குத் தீர்வு கிட்டும் வரை போராட்டத்தைத் தொடருவோம் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் சுத்திகரிப்புப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-17)

# செட்டிகுளம் கோட்டத்தில் கல்வி நிலை பெருவீழ்ச்சி

## சிவசக்தி எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜன.24

வவுனியா செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையால் கல்வியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.



செட்டிகுளம் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட 260 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடரீதியாக சமமாகப் பங்கீடு செய்யப்படவில்லை. இதனால் கிராமப் புறத்தில் கல்வி கற்கும் வறிய மாணவர்களின் கல்வி பெரு வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 94 ஆசிரியர்களுக்குப் பாடரீதியான வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளன.

இத்தகைய பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்றுச்செல்கின்ற ஆசிரியர்களுக்குப் பதிலீடாக மீள் நியமனம் செய்வதில் காலதாமதங்கள் நிலவுகின்றன. இதனால் வன்னியில் கல்வி கற்கின்ற கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வி பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றது- என்றார்.

நிகழ்வில் கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு நிதிப் பங்களிப்பைச் செய்த லண்டனைச் சேர்ந்த வேல்முருகு பரமேஸ்வரன், சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த வேல்முருகு தனஞ்சயன் மற்றும் மயில்வாகனம் பாஸ்கரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் ந.மதிகரன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர்களான டெல்சன், உருத்திரன், தயாளினி மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பலரும் கலந்துகொண்டனர். (து-110)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஜன.24

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல்1.30மணிக்கு பாடசாலைவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் இ.இராமசாமி சிறிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி, வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், கௌரவ விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக்கல்வி அலுவலர் நோபேட் உதயகுமார், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நவரத்தினம் ரவிவண்ணன், சங்கானை ஸ்தான அ.மி. த.க.பாடசாலை அதிபர் மகாதேவன் முகுந்தன், சங்கானைக் கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் மு. அசோக்குமார், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயரட்ணம் விகர்ணன், ஒட்டகப்புலம் றோ.க.த.பாடசாலை ஆசிரியர் த.நித்திலா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

★★★

யாழ்ப்பாணம், ஜன.24

நடேஸ்வரக்கல்லூரி, நடேஸ்வரக்கனிஷ்ட வித்தியாலயம், காங்கேசன்துறை மகா வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு தெற்குப் போதனா மருத்துவமனை விளையாட்டு மருத்துவ அதிகாரி மருத்துவர் ப.சுரேஷ் மோகன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் வை.சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

★★★

அராலி,ஜன.24

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1மணிக்குப் பாடசாலையில் நடைபெறும்.

அதிபர் வை.விமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர்.எஸ். இருதயநாயகம், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் சிறி அருளானந்தம் குகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (க-63)

★★★

யாழ்ப்பாணம்,ஜன.24

வயாவிளான் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் ச.சர்வராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## வீரவன்சவுக்கு கடும் கண்டனம்

மன்னார், ஜன. 24

தலைமன்னார் செல்வெரி கிராமத்தில் அமைக்கப்பட்ட பனந்தும்புத் தொழிற்சாலையின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழியை இரண்டாம் நிலைக்குத் திணித்த வீரவன்சவின் செயலுக்கு மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பூர்வீகம், தாயகம். இங்கு தமிழர்களே பெரும்பான்மை. வடக்கு கிழக்கில் தமிழுக்குத்தான் முதலிடம். இந்த அரசு அராஜக ஆட்சி நடத்துகின்றது. விமல் வீரவன்ச வடக்கில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் அவமானப்படுத்தியுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)

# பரராஜசிங்கம் வழக்கு பெப். 25க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கு விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் மேல்நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லாஹ் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

அதேவேளை இந்த வழக்கு தொடர்பாக கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 6ஆம் திகதி அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம், ராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் மீராலெப்பை கலீல், முன்னாள் ராணுவச் சிப்பாயான மது சிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

## பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு,ஜன.24

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட வணிகர்கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று வணிகர் கழகத் தலைவர் செ.செல்வச்சந்திரன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில், வணிகர் கழகத் தலைவர் தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-19)

# குப்பை மேட்டுக்கு எதிராக மக்கள் தொடர் போராட்டம்

வவுனியா,ஜன.24



வவுனியா மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்துக்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பை மேட்டை அகற்றுமாறு கோரி, பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு தங்களுக்கு உரிய தீர்வைப் பெற்று தரும் வரை போராட்ட இடத்திலிருந்து விலகிச் செல்ல மாட்டோம் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

குப்பைகளைக் கொட்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாத வகையில் நேற்று முன்தினம் போராட்டத்தை மக்கள் ஆரம்பித்தனர். அதனால் வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபை கழிவகற்றும் வாகனங்கள் குப்பைகளைக் கொட்ட முடியாது ஸ்தம்பிதம் அடைந்தன. குப்பைகளுடன் வாகனங்கள் நகரசபையில் தரித்து விடப்பட்டுள்ளன.

இதனால் மருத்துவமனை மற்றும் ஏனைய அரச திணைக்களங்களின் குப்பைகள், வவுனியா நகர்ப்பகுதிக் குப்பைகள் அனைத்தும் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (க-110,222)



மாந்தை கிழக்கு பிரதேச செயலக பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை செயலக முன்றிலில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-9)

## சமூகப்பணியில் ஈடுபடும் பெண்களுக்கு விருது

கிராமத்தில், மாவட்டத்தில் பல பிரதேசங்களில், பெண்கள் சமூகத்தில் எவ்வாறான பங்களிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் எந்தளவில் முன்னேறியுள்ளனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு விரைவில் விருது வழங்கப் படவுள்ளது.

பெண்களைச் சமூகமயப்படுத்தி அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அதனூடாக அவர்கள் இன்னும் சிறப்பாகப் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் சமூகத்தில் பங்களிப்புச் செய்கின்ற பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான சமூக விருட்சம் என்ற விருது வழங்கப்படவுள்ளது.

'இதற்காக 50 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இன்னும் ஒரு சில விண்ணப்பங்களை எதிர்பார்த்திருக்கின்றோம். இதற்கான ஒரு தேர்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதனூடாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விருது வழங்கப்படும்' என்று தமிழ் விருட்சம் அமைப்பின் செயலாளர் மாணிக்கம் ஜெகன் தெரிவித்துள்ளார். (க)

### வவுனியா மாவட்டத்தில்

# 271.48 கி.மீ. வீதிகளுக்கு "காப்பெற்"

**வவுனியா,ஜன.24**

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த சாலை (ஐரோட்) திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 271.48 கிலோமீற்றர் வீதிகள் 'காப்பெற்' வீதிகளாகப் புனரமைக்கப்படவுள்ளன.**

வவுனியாவில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளை யும் உள்ளடக்கிய வீதிகளுக்கு 12947.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக வவுனியாவில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட பல்வேறு முக்கிய வீதிகள் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படவுள்ளன.

வவுனியாவிலிருந்து பறையனாலங்குளம் வரையான 35.60 கிலோமீற்றர் வீதி, வவுனியாவிலிருந்து நேரியகுளம் வரையான 14.10 கிலோமீற்றர் வீதி, பூவரசங்குளம் துணுக்காய் வரையான 10.60 கிலோமீற்றர் வீதி, பூவரசங்குளம்செட்டிகுளம் வரையான 12.30 கிலோமீற்றர் வீதி, உலுக்குளம் தொடக்கம் வாரிகுட்டியூர் வரையான 10.21 கிலோமீற்றர் வீதி, மணியர்குளம் பிரப்பன்மடு வரையான 8.35 கிலோமீற்றர் வீதி,நெடுங்கேணி கூழாங்குளம் வரையான 15 கிலோமீற்றர் வீதி, பூந்தோட்டம் சாந்தசோலை வீதி,பிராமணாலங்குளம் பரப்புகடந்தான் வரையான 9.15கிலோமீற்றர் வீதி, கல்நாட்டியகுளம் தொடக்கம் ஆசிகுளம் வரையான வீதி,நைனாமடு சமளங்குளம் வீதி, புதூர்வீதி, ஓமந்தை இளமருதங்குளம் வரையான வீதி, சேமமடு வீதிகள் உட்பட வவுனியா நகரசபை மற்றும் மூன்று பிரதேச சபைகளுக்குட்பட்ட சிறுவீதிகளும் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் முன்னெடுக்கப்பட வுள்ள 171.17 கிலோமீற்றர் அளவிலான வீதிகளுக்கான ஒப்பந்தம் மாகா பொறியியல் நிறுவனத்துக்கும், 100.31கிலோமீற்றர் வீதிகள் சைனாஸ்ரேற் பொறியியல் நிறுவனத்திடமும் வழங்கப்பட்டுள்ளது.

ஐரோட் திட்டத்தின் கீழ் வடக்கில் 1034.18 கிலோமீற்றர் நீளமான 343 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 273.24 கிலோமீற்றர் வீதிகளும், கிளிநொச்சியில் 181.78 கிலோ மீற்றர் வீதிகளும், முல்லைத்தீவில் 141.34 கிலோமீற்றர் வீதிகளும், மன்னாரில் 166.34 கிலோ மீற்றர் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. அதற்கான ஒப்பந்த காலம் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டுள்ளன. (க-110)

# கால்கோள் விழாக்கள்

## அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்




கொடிகாமம்,ஜன.24

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

புதிதாக இணைந்துகொண்ட தரம் ஒன்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமையுடன், அவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)



## கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்



கொடிகாமம்,ஜன.24

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்தவாரம் காலை 8 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் திருமதி சுபாதினி சத்தியேந்திரம்பிள்ளை, சிறப்பு விருந்தினராகக் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மகாராணி சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தரம் ஒன்றுக்குப் புதிதாக இணையும் மாணவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.(ஐ-159)

## கைதடி எருதிடல் அ.த.க பாடசாலை

கைதடி எருதிடல் அ.த.க பாடசாலையின் கால்கோள் விழாவும் சின்னம் சூட்டும் நிகழ்வும் கடந்தவாரம் முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஜே.தர்மதுரை தல்லமையில் நடைபெற்றன. நிகழ்வில், பிரதம விருந்தினராக இத்தாலியில்வசிப்பவரும் பழைய மாணவருமான ம.யுகதாசனும் ,சிறப்பு விருந்தினர்களாகக் கைதடி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி உஷா விக்னேஸ்வரன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க முன்னாள் செயலர் திருமதி மதனா அன்பழகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக, பழைய மாணவிகளான செல்வி சுயானா மகாலிங்கம், செல்வி தாரங்கினி சிவலிங்கம், செல்வி பிரியங்கா சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தரம் இரண்டு மாணவர்கள் தரம் ஒன்று மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றமையுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ந-159)



# 48 'யூடியூப்' சனல்களுக்கு ஹிருணிகாவால் சிக்கல்

கொழும்பு. ஜன. 24

48 யூடியூப் சனல்களுக்கு எதிராக, அந்த நிறுவனத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தான் மேற்கொண்ட உரையாடல்கள் எனக் கூறப்படும் குரல் பதிவுகளைப் பதிவேற்றம் செய்துள்ள 48 யூடியூப் சனல்களுக்கு எதிராகவே தான் முறைப்பாடு செய்துள்ளனர் என ஹிருணிக்கா பிரேமசந்திர குறிப்பிட்டுள்ளார்.

'48 'யூடியூப்' சனல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை திரிபுபடுத்தப்பட்ட, போலியான குரல் பதிவுகளை வெளியிட்டுள்ளன. இந்த சனல்களை யூடியூப் அகற்றும். எனது பெயரைக் கெடுப்பதன் மூலம் சம்பாதிக்க முயன்றவர்களுக்கு நல்வாழ்த்துகள்' என்று முகநூலில் பதிவிட்டுள்ளார். (ஒ.5)



# குப்பையேற்ற தடை வாகனங்கள் முடக்கம்

வவுனியா, ஜன.24

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை ஏற்றாது வவுனியா நகரசபை வளாகத்தில் நேற்றுமுன்தினம் 8 க்கும் மேற்பட்ட குப்பையேற்றும் வாகனங்கள் தரித்து விடப்பட்டிருந்தன.

வவுனியா மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள குப்பை மேட்டை அகற்றுமாறு கோரி பிரதேச இஸ்லாமிய மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 8 க்கும் மேற்பட்ட குப்பையேற்றும் வாகனங்கள் குப்பைகளை ஏற்றச் செல்லாது நகரசபை வளாகத்தில் தரித்து விடப்பட்டிருந்தன. (சு-18)

# விவசாயிகள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன.24



கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கௌரவிக்கப்பட்டனர். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாயமும், கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சால் வருடாந்தம் விவசாயிகள் பண்ணையாளர்களிடையே நடத்தப்படும் போட்டிகளில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 368 பேருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகான விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி னார். நிகழ்வில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (சு-35,22)



# "ரஞ்சன் லீக்ஸ்" பின்னணி வேறு

## சுதந்திரக் கட்சி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 24

**திருடர்களைப் பொறிவைத்து பிடிப்பதற்காகவே தொலைபேசி உரையாடல்கள் தொடர்பான குரல் பதிவுகளைச் சேமித்து வைத்திருந்தால் எனக் கூறும் ரஞ்சன் ராமநாயக்க, கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை திருடர்களை பிடித்துள்ளார்? வேறு நோக்கங்களுக்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டுள்ளார். குரல் பதிவின் உண்மையான நோக்கம் என்னவென்பதை அவர் அறிவிக்கவேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

சுதந்திரக்கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, தெற்கு அரசியலில் பெரும்சர்ச்சையைஏற்படுத்தியுள்ள குரல் பதிவு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொலைபேசி உரையாடல்களை ஏன் ஒலிப்பதிவு செய்து சேமித்து வைத்தார் என்பதற்கான விளக்கத்தை ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்தில் வழங்கியிருந்தார். திருடர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி நாட்டில் ஊழல், மோசடிகளை தடுப்பதற்காகவே தான் இவ்வாறு செய்தார் எனவும் குறிப்பிட்டார். அரச அதிகாரிகள் பதவி உயர்வுக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ பதவி முறை கேட்டில் ஈடுபட்டிருந்தால் அது தொடர்பான சாட்சிகள் நிச்சயம் வெளியிடப்படவேண்டும். அதனை நாமும் வரவேற்போம்.

ஆனால், கசிந்துள்ள குரல் பதிவில், உரையாடப்பட்டுள்ள விடயங்கள் படுமோசமாக இருக்கின்றன. இது தொடர்பில் அவர் எதையும் கதைக்கவில்லை. அவருக்குச் சார்பானவர்களிடம் அதற்குப் பதிலும் இல்லை. திருடர்களைப் பிடிப்பதும் அதன் பிரதான நோக்கமாகத் தெரியவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஐக்கிய தேசியக்கட்சி அரசே நீடித்தது. ரஞ்சன் ராமநாயக்கவும் அரசில் அங்கம் வகித்தார். இக்காலப்பகுதியில் அவர் திருடர்களைப் பிடித்தாரா? திருடர்களை பிடிப்பதற்கான சாட்சியாக ஒரு குரல்பதிவையேனும் பயன்படுத்தினாரா? சட்டரீதியான நடவடிக்கைக்கு குரல் பதிவுகள் சாட்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா? இல்லை. சேமித்து வைக்கப்பட்டிருந்த குரல்பதிவுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பின்னரே, திருடர்களைப் பிடிக்கவே அவையென ரஞ்சன் விளக்கமளிக்கிறார். உண்மையான விடயம் அதுவாக இருக்காது. இதன் பின்னணியில் வேறு நோக்கம் இருக்கலாம். அது என்ன என்பதை ரஞ்சன் அறிவிக்க வேண்டும், - என்றார்.

# மஹிந்தாவின் பதிவை முடிந்தால்வெளியிடவும்

## ரஞ்சனுக்கு சவால் விடுகிறார் மஹிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, ஜன. 24

தம்மீதான சேறுகளைக் கழுவிக்கொள்ளும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உரையாற்றியுள்ள போதிலும் அவரின் உண்மை முகம் நாட்டுக்கு ஏற்கனவே அம்பலமாகிவிட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட எமது அரசில் இருக்கும் ஓர் அமைச்சரின் குரல் பதிவை வெளியிடுமாறு பகிரங்கமாக கோருகின்றோமென இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர், அமைச்சர்கள், அமைச்சர்களின் மனைவிகள் மற்றும் மகள்மாரின் குரல் பதிவுகளும் தம்மிடமுள்ளன என் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். குரல் பதிவுகள் அனைத்தையும் சபைக்கு ஆற்றுப்படுத்துவதாகவும் கூறியிருந்தார். ஆனால், இதுவரை எந்தவொரு குரல்பதிவையும் அவர் சபைக்கு ஆற்றுப்படுத்தவில்லை.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை மீறித் தம்மீதான சேறுகளை கழுவிக்கொள்ளும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க உரையாற்றியிருந்த போதிலும் அவரது உண்மை விம்பம் நாட்டுக்கு அம்பலமாகி பல நாள்களாகி விட்டன.

முடிந்தால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் அவர்களது மனைவிமார் மற்றும் மகள்மாரின் குரல்பதிவுகளை வெளியிடுமாறு கோருகின்றோம். மோசடிகள் தொடர்பிலான மற்றும் வழக்குகளுக்காக 'லீ' போட்டதாகக்கூறப்படும் குரல் பதிவுகளை வெளியிடுமாறு ரஞ்சன் ராமநாயக்கவிடம் பகிரங்கமாகக் கோருகின்றோம், -என்றார். (ஒ.5.24)

# விவாத சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தால் பாடசாலைகளுக்கு இடையில் கலாநிதி க.சிவராமலிங்கம்பிள்ளை ஞாபகார்த்த விவாதச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டி விதிமுறைகளாக ஓர் அணியில் ஐவர் இடம் பெறவேண்டும். தெரிவுப் போட்டிகளுக்கான தலைப்புக்கள் முன்னரே வழங்கப்படும். ஆனால் போட்டித் தினத்தன்று வழங்கப்பட்ட தலைப்புக்களில் ஒன்று நடுவர்களால் முடிவுசெய்யப்பட்டு வழங்கப்படும். அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றுக்கான தலைப்புக்கள் உடன் வழங்கப்பட்டுத் தயார்ப்படுத்தலுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் உரிய வகையில் நிறைவு செய்யப்பட்டு அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இல. 28 குமாரசாமி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

போட்டி பற்றிய மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத் தலைவர் ச.லலீசனைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

# ஆதனவரி அதிகரிப்பை எதிர்த்து வர்த்தகர் தொடர் உண்ணாவிரதம்

கிளிநொச்சி,ஜன.24

கரைச்சிப் பிரதேச சபையால் மக்களிடம் அதிகரித்த வீதத்தில் அறவிடப்பட்டு வருகின்ற ஆதனவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வர்த்தகர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளார். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி நகரில் வர்த்தகர்கள் தமது வர்த்தகச் செயற்பாடுகளைக் கைவிட்டனர். பல கடைகள் பூட்டப்பட்டிருந்தன.



கரைச்சிப் பிரதேச சபையால் கடந்த ஆண்டு இறுதியிலிருந்து ஆதன வரி அறவிடப்பட்டு வருகிறது. இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த வீதமான பத்து வீதமாக வரி அறவிடப்பட்டுவருவதாகத் தெரிவித்தும், அதனைக் குறைக்குமாறு தெரிவித்துமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"கிளிநொச்சி போன்ற இலங்கையில் வறுமையில் முன்னிலை வகிக்கும் மாவட்டத்துக்கு இந்த வரி நடைமுறை பொருத்தமற்றது. யாழ்ப்பாணத்தில் கூட 4-5 ஐந்து வீதங்களில் ஆதனவரி அறவிடப்படுகின்றது. ஆனால் கரைச்சி பிரதேச சபையில் மட்டும் 10 வீதம் அறவிடப்படுகிறது. இது போரினால் பாதிக்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்ற மக்கள் மீது சுமத்தப்படுகின்ற பெரும் சுமையாகும்" என்று தெரிவித்துள்ளார் வர்த்தகரான கு.மகேந்திரன். அவரே சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

"சுமத்தாதே! சுமத்தாதே! மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே!, மீண்டெழும் கிளிநொச்சியை வரிச்சுமையால் நசுக்காதே!, நியாயமான வரியை அறவிடு, மக்களுக்குச் சேவையை வழங்கு! மரத்தால் வீழ்ந்த மக்களை மாடுமிதித்த கதையாய் மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே! மக்களுக்கான சேவைகளை வழங்காது வரிகளை மாத்திரம் அறவிடாதே! கழிவுகளை அகற்ற முடியாத உனக்கு அதிகரித்த ஆதன வரி எதற்கு?, இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த ஆதன வரியை அறவிடுவது நியாயமா? குண்டுகளால் தாக்கப்பட்ட கிளிநொச்சி மக்களை வரியால் தாக்காதே! வரி மக்களின் நலனுக்காகவா உனது வசதிக்காகவா அறவிடுகிறாய்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் போராட்ட இடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

போராட்டத்துக்கு வர்த்தக அமைப்பினர், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினர், பொது மக்கள் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சாராத கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும், வர்த்தகர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (சு-6,35)

## கடைகளை பூட்டுமாறு போலியான கடிதம்

போலியான கடிதங்களை நம்பி கடைகளைப் பூட்ட வேண்டாம் என்று கிளிநொச்சி வர்த்தக சங்க உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சியில் ஆதனவரி செலுத்திய வர்த்தகர் ஒருவர், கரைச்சி பிரதேச சபை ஆதனவரி அதிகரித்துள்ளது எனத் தெரிவித்து நேற்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில் கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கம் எனப் பெயரிடப்பட்ட போலியான கடிதம் கிளிநொச்சி வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதில் தலைவர், செயலாளர் ஆகியோரின் கையெழுத்துக்கள் இல்லை. எனவே கடிதம் போலியானது என்று கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (சு-6)

## சட்டப்படியே வரி அறவீடு

கிளிநொச்சியில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகருக்கு அறவிடப்பட்ட வரி சட்டத்துக்கு அமைவானதே என்று விலை மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நபரின் சொத்த மதிப்புத் தொடர்பில் மாற்றங்கள் மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை கரைச்சிப் பிரதேச சபையினர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கேட்டுள்ளனர். அதற்குப் பதிலளிக்கும் வகையில் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் பதிலைவழங்கியுள்ளது. அதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அயலிலுள்ள கட்டடங்களுக்கு விதிக்கப்பட்ட அதே அளவீட்டு நடைமுறையே நபரின் ஆதனங்களின் வரி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடம் 10 % அறவீடானது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டு அறிவிடப்படுகின்றது. நபரிடமிருந்து பெறப்படும் வரிப்பணம் 76 ஆயிரத்து 902.40 ரூபாவானது, 10 ஆதனங்களைமேற்குறித்த வரிப் பெறுமதியானது உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது .இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு ஆதனங்களுக்கான மதிப்பீடானது சாதாரண முறையிலேயே மேற்கொள்ள ப்பட்டுள்ளது. பெறுமதிகளில் எவ்வித மாற்றமும் இல்லை" என்றுள்ளது. (சு-35)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21 . 02 . 1953

மறைவு
24 . 01 . 2012

அமரர் கனகசபை விஜயரத்தினம் (ஞானம்)

(உரிமையாளர் - ஞானம் பெயின்ற், கண்ணன் பெயின்ற் )



நித்தமும் எம் நினைவில் நின்று
நிஜயத்தில் இறைவனிடம் கலந்திட்ட - எங்கள்
அன்பு அப்பாவே! - ஆண்டுகள்
எட்டு என்ன! எங்கள் உயிர் உள்ளவரை
நீங்கா உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் பிரிவால் துயருற்று வாடும்

(CS/30718493117)

"விஜய் மகால்"
பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவுகளுடன்....



தோற்றம் 25.06.1967
மறைவு 22.01.2012

திதி: தை அமாவாசை (24.01.2020)

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

அமரர் நடராசா காசிவேந்தன்

(MA, B.Com, Dip in pds. Dip in mgt)

(முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம் உடுவில்)

மண்ணில் உதித்த வதனமே - நீர்
உமது அகவையோ ஐம்பத்து மூன்று
பசுமையான பேச்சும் பதுமையான நடையும்
நொடிப் பொழுதில் மறைந்த தேனோ
நீர் வாழ்ந்த காலத்தில்
குடும்பத்திற்காக, சமூகத்திற்காக
செய்த சேவைகள் என்றும் அழியா!
ஆண்டுகள் எட்டு ஆனாலும் என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்


குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
மயில்வாகனம் வைகுந்தவாசன்

(வாசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - சாவகச்சேரி)

திதி:- 24.01.2020



அருகிருந்து அரவணைத்து அன்பு செய்தீர்
எம்மை
ஆறுதலும் தந்தெமக்கு ஆதரவாய் நின்றீர்
மேதினியில் சிறப்புடனே நாமும் வாழ -
உம்மை
மெழுகாக உருக்கி நீரும் வாழ்வு தந்தீர்
மேன்மைகொள் இறையவனின் சந்நிதியில்
மேலான நிறை அமைதி கொண்டிடுவீர்.

குடும்பத்தினர்.
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

உதிப்பு 03.05.1957
உதிர்வு 17.01.2018



# இ.போ.ச. - தனியார் பஸ் முறுகல் விரைவில் தீரும்

## ஆணைக்குழுத் தலைவர் உறுதி

**யாழ்ப்பாணம், ஜன. 24**

**வவுனியா பஸ் நிலையத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் பேருந்து நடத்துநர்கள்,சாரதிகளுக்கும் இடையிலான முறுகல் நிலை தொடர்பில் விரைவில் ஆலோசிக்கப்பட்டு இரு தரப்புக்கும் இடையில் இணைந்த நேர அட்டவணையைத் தயாரித்து சிறந்த சேவையை வழுங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல்கம உறுதியளித்துள்ளார்.**

இந்தச் சிக்கல் உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் கொழும்பிலுள்ள அவருடைய அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அவரைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு உறுதிமொழி வழங்கினார் என்று வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் க.செவ்வேள் தெரிவித்தார். வவுனியா பஸ் நிலையத்தை வடக்கு மாகாணத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சருடன் ஆராயந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையக் கட்டுமானங்கள் அரைகுறையாக வுள்ளன. அதை ஓரிரு வாரங்களில் வடக்கு மாகாண சபையிடம் கையளித்து கட்டுமான வேலைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் சசி வெல்கம உறுதியளித்தார் என்று செவ்வேள் தெரிவித்தார் என்று வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்தது. (து-20)

# இரு சுவாமிகளுக்கு உருவச் சிலைகள்

காரைநகர்.ஜன.24

வரலாற்று சிறப்பு மிக்க காரைநகர் திண்ணபுரம் யோகர் வளாகத்தில் இரு உருவச் சிலைகள் திறந்து வைக்கப் படவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிவன் ஆலயத்துக்கு நேர் எதிரே உள்ள யோகர் வளாகத்தில் நிகழ்வு நடைபெறும். யோகர் சுவாமிகள் மற்றும் மகா அவதார புருஷர் பாபாஜி ஆகிய இரு சுவாமிகளின் உருவச் சிலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

தலைவர் யோகி ராம் சுந்தர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், சின்மயா மிசன் சுவாமிகள் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன், சமூர்த்தி அதிகாரி ப.ஐங்கரன், யாழ். மத்திய கல்லுரி ஆசிரியர் செ. லோகேஸ்வரன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

அன்றைய தினம் திருவாசக நூல் வெளியிடப்படும். வெளியீட்டு உரையை காரைநகர் மணிவாசகத் தலைவர் பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை நிகழ்த்துவார். (சு-50)

# மாற்றத்துக்கு ரணிலின் ஆசிர்வாதம் கிடைக்கும்

## ஹேஷா விதானகே நம்பிக்கை

கொழும்பு. ஜன.24



மாற்றத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஆசிர்வாதம் கிடைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் எதிர்பார்ப்பதைப் போன்று சஜித் பிரேமதாசவின் பலம் மிக்க தலைமைத்துவத்தின் கீழ் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான குறுகிய, நீண்டகால வேலைத் திட்டங்கள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

24 ஆண்டுகள் கட்சிக்குத் தலைமைத்துவம் வகித்த ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சக்தியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கி, அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தலைமைத்துவம் ஒன்று தேவை என்பதே எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பு. அடுத்த தேர்தலுக்காக மாத்திரம் தலைமைத்து வத்தில் மாற்றம் வேண்டும் என்று நாம் சிந்திக்கவில்லை - என்றார். (எ)

# ஜயம்பதி இடத்துக்கு ரத்னபிரிய

கொழும்பு, ஜன.24

ஜயம்பதி விக்ரமரத்ன பதவி விலகியமையைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சமன் ரத்னபிரியவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதியான சமன் ரத்னபிரிய, அரச தாதியர் சங்கத்தின் தலைவராகச் செயற்படுகின்றார்.

ஐக்கியதேசியக்கட்சியின்தேசிய பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன நேற்றுமுன்தினம் தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தார். நாடாளுமன்ற பொதுச் செயலாளரால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# முல்லை. பேருந்து சாலையின் பற்றாக்குறைகளை தீருங்கள்

## அமைச்சரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 24



முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச பேருந்து சாலையில் ஏற்பட்டுள்ள நிர்வாக அலுவலர்கள் பற்றாக்குறை மற்றும் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் உள்ளிட்ட வெற்றிடங்களை நிரப்புமாறு பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

31 பேருந்துக்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட பேருந்து சாலையில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. பத்து ஓட்டுநர்களும், பத்து நடத்துநர்களும் ஆள்சேர்ப்புச் செய்யப்படவேண்டும்.

மாவட்ட சாலையில் உள்ள 31 பேருந்துக்களுக்கும் ஒரே ஒரு திருத்துநர் மட்டுமே இருக்கின்றார். அவரின் கீழ் உதவியாளர்களாக - தற்காலிகமாக -எட்டு திருத்து நர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்கள் நிரந்தர திருத்துநர்களாக நியமிக்கப்படவேண்டும்.

டீசல் நிரப்பு நிலையம் (பம்ப்) இருந்தும் நிதிப் பற்றாக்குறையால் அதைப் பொருத்த முடியவில்லை. நாள்தோறும் ஆயிரம் ரூபா ஊதியத்தில் பணிபுரியும் 18 தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து-19)

# தபால் வாக்களிப்பு சட்டத்தில் திருத்தம்




கொழும்பு, ஜன.24

தபால் மூல வாக்களிப்புத் தொடர்பான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டத்துறைப் பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியச் சேவைகளில் பணிபுரிவோருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குவதற்காக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தனியார் பிரிவுகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தபால் மூலம் வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதும் இந்தச் சட்டத்திருத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



# போக்கட்டி றோ.க.த.கவின் செயற்பட்டு மகிழ்வோம்


கொடிகாமம்,ஜன.24

போக்கட்டி றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் குழும நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிவனேசன், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. விருந்தினர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-159)







# விவசாயிகள் கௌரவிப்பு


மன்னார்,ஜன.24

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமடு மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் பொங்கல் நிகழ்வும், மூத்த விவசாயிகள் கௌரவிப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

பெரிய மடு மேற்கு கிராம அலுவலகர் எஸ்.லுமாசிறி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மன்னார் மாவட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட மூத்த விவசாயிகள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (க-56)

# முல்லைத்தீவு மீன் வளத்தை சுரண்டும் தெற்கு மீனவர்கள்



யாழ்ப்பாணம், ஜன.24

**தென்னிலங்கை மீனவர்களின் வருகை முல்லைத்தீவில் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு நாளும் நாட்டுப் படகில் வரும் அவர்கள் சட்டவிரோதத் தொழில்களை மேற்கொண்டு வளங்களை அள்ளிச் செல்கின்றனர். முல்லைத்தீவைக் கைப்பற்ற ஆரம்பித்துள்ளனர். முல்லைத்தீவு கைப்பற்றப்பட்டால் அடுத்து யாழ்ப்பாணத்துக்கும் வருவார்கள் என்று வடக்கு மாகாண கடற்றொழில் இணையத்தின் பொருளாளர் அன்ரனி தெரிவித்தார்.**

வடக்குமாகாணக்கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுச் சபைக் கூட்டம் இணையத்தின் தலைவர் என். வி. சுப்பிரமணியம் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ் பாடி விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

கூட்டத்தில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இணையத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது மாவட்டங்களில் கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பேசினர். அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்தொர்பிலும்ஆராய்ந்தனர்.


இணையத்தின் பொருளாளர் திரு ஞானதீபன் அன்ரனி தெரிவித்ததாவது; "முல்லைத்தீவில் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான் சட்டவிரோதத் தொழில்கள் இடம்பெறுகின்றன. தென்னிலங்கை மீனவர்கள் அவற்றைச் செய்யும் போது எமது மீனவர்களிடத்திலும் அது பரவ வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தென்னிலங்கை மீனவர்களால் தற்போது அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் தான். முல்லைத்தீவில் கொக்குளாய், முகத்துவாரம், கொக்குத்தொடுவாய், நாயாறு, வெலிஓயா, செம்மலை முள்ளிவாய்க்கால் போன்ற கடற்பரப்புக்களில் தென்னிலங்கை மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளது. முல்லைத்தீவையும் அவர்கள் கைப்பற்றினார்கள் எனில் அடுத்தது யாழ்ப்பாணம் தான். எனவே வடக்கு மீனவர்களாகிய நாங்கள் ஒருமித்துச் சிந்திக்க வேண்டும்." -என்றார். (க-21)



# ஸ்ரீ சண்முகானந்தாவின் செயற்பட்டு மகிழ்வோம்

கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை , விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந திருவாசகன், செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் . நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (க-159)





# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்

## சாதகங்களும் 'கவனத்துக்கு' உரியவையும்!

கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்






## மகரம்

உத்திராடம் 2,3,4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதம்

இளைஞனாக இருந்து வாழ்க்கையில் நுழைய இருப்பவர்களுக்குப் படிப்பறிவு, கேள்வி அறிவு இருந்தால் மட்டும் போதாது. பட்டறிவு இருந்தால்தான், வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பது பொதுவாக சொல்லப்படக்கூடிய சித்தாந்தம். அந்த வகையில் 2020ம் ஆண்டு மகர ராசிக்காரர்களுக்கு `அனுபவமே ஆசான்' என்று சொல்லக்கூடிய ஆண்டாக இருக்கும்.

ஏராளமான புதிய அனுபவங்கள் இனிப்பாகவும் கசப்பாகவும் உங்களுக்காகக் காத்து இருக்கின்றன. வெற்றி, தோல்வி இரண்டுமே ஒரு மனிதனுக்கு அனுபவம்தான். வெற்றி கிடைக்கும்போது சந்தோஷத்தில் ஆடக் கூடாது, தோல்வி கிடைக்கும்போது துயரத்தில் துவண்டு போய்விடக் கூடாது என்கிற ஞானம் இந்த ஆண்டு உங்களுக்குக் கிடைக்கும்.

நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள், வேலை தருபவர் எப்படிப்பட்டவர், உங்களுக்குக் கீழ் வேலை பார்ப்பவர் எப்படிப்பட்டவர், பணம் கொடுப்பவர் எப்படிப்பட்டவர், பணம் வாங்குபவர் எப்படிப்பட்டவர் என்பதையெல்லாம் உங்களுக்கு இந்த ஆண்டு கற்றுத் தரப்போகிறது.

உங்களின் தொழிலை நீங்கள் எப்படிச் செய்யலாம், எப்படிச் செய்யக்கூடாது என்பதற்கான முன்னோடியாகவும் அனுபவமாகவும் 2020ம் ஆண்டு அமையும். இந்த அனுபவம்தான், எதிர்வரும் காலத்தில் உங்களின் வாழ்க்கையை முறையாகத் திட்டமிட வைத்து, ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்துவைக்க உதவும்.

சவால்களைச் சந்திப்பதில் தயக்கம் காட்டாதவர் நீங்கள். உங்களின் ராசிக்கு 2ம் இடத்தில் இந்தப் புத்தாண்டுப் பிறப்பதால் எதிர்பார்த்திருந்த தொகை வந்து சேரும். குடும்பத்தில் அமைதி பிறக்கும். உங்களின் ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். தடைப்பட்ட பல காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். குடும்ப வருமானத்தை உயர்த்தத் திட்டமிடுவீர்கள்.

26.12.2020 வரை சனி பகவான் ராசிக்கு 12ம் வீட்டில் ஏழரைச் சனியின் ஒரு பகுதியான விரயச் சனியாகத் தொடர்வதால், வருங்காலத்தைப் பற்றி கவலைப்படுவதை விட மாற்றுவழியை யோசியுங்கள். அரசாங்க அதிகாரிகள், வி.ஐ.பிகளுடன் வீண் வாதங்களில் ஈடுபட வேண்டாம். வீடு கட்ட வங்கி களில் பணம் வாங்கியிருந்தவர்கள் தவணைகளைத் தள்ளிப்போடாதீர்கள்.

12.11.2020 வரை உங்களின் விரயாதி பதியான குருபகவான் உங்களின் ராசிக்கு 12ம் வீட்டில் நிற்பதால், ஆக்கபூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்கவேண்டியிருக்கும். பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை நல்லவிதமாக முடியும். சிலருக்கு அயல்நாட்டுப் பயணம் அமையும். முதல் முயற்சியிலேயே வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். வாகன வசதி பெருகும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உதவுவார்கள்.

13.11.2020 முதல் வருடம் முடியும் வரை குரு பகவான் உங்களின் ராசிக்குள்ளேயே ஜன்ம குருவாக அமர்வதால் உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பிள்ளைகளின் போக்கைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுங்கள். குடும்பத்தில் சுபச்செலவுகள் இருந்துகொண்டேயிருக்கும். விருந்தினர், உறவினர்கள் வருகை அதிகரிக்கும். விலையுயர்ந்த ஆபரணங்களை இரவல் தரவேண்டாம். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திடவேண்டாம்.

**ஏராளமான புதிய அனுபவங்கள் இனிப்பாகவும் கசப்பாகவும் உங்களுக்காகக் காத்து இருக்கின்றன**

வருடம் பிறக்கும்போது, கேது 12ம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக லாபம் உண்டு. திடீர் பயணங்களும் அலைச்சல்களும் அதிகரிக்கும். உணர்ச்சிவசப்பட்டு தவறான முடிவுகளை எடுக்க வேண்டாம். சொத்து வழக்கில் அலட்சியம் காட்டாதீர்கள். ராகு 6ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். எல்லா வசதிகளும் நிறைந்த வீட்டுக்குக் குடிபுகுவீர்கள். செப்டம்பர் மாதம் முதல் உங்களின் ராசிக்கு 11ம் வீட்டில் கேதுவும் 5ம் வீட்டில் ராகுவும் நுழைவதால் பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். மகளின் கல்யாணத்தைப் போராடி முடிப்பீர்கள்.

பெண்கள் உயர்கல்வியில் அலட்சியப்போக்குடன் இருக்க வேண்டாம். பெற்றோரின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளியுங்கள். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

வியாபாரிகளே! பழைய வாடிக்கையாளர்களை ஈர்க்க புது திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள். பெரிய முதலீடுகளை இப்போது செய்ய வேண்டாம். அனுபவம் மிகுந்தவர்களை பணியில் அமர்த்துவீர்கள்.

விவசாயிகள் விளைச்சலை அதிகப்படுத்த மாற்றுப் பயிரைத் தேர்வு செய்வார்கள். நெல், கரும்பு, நிலக்கடலை மூலம் ஆதாயம் அடைவார்கள். பூச்சித்தொல்லை விலகும். காய்கறி, பழ வகைகளால் லாபம் அடைவார்கள். தண்ணீர் வசதி பெருகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, வருட முற்பகுதியில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றம் வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும். கணினித் துறையினரே, புதிய வாய்ப்புகளை ஏற்பதில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் தேடி வரும்.

---

தினம் ஒரு சிந்தனை

# வெட்கம் அவசியம்

மனித உடலில் அந்தரங்கமான சில பகுதிகள் உண்டு. வெளிரங்கமான சில பகுதிகள் உண்டு. அந்தரங்கமான விஷயங்களை நாம் எப்படி வெளிப்படுத்த மாட்டோமோ அவ்வாறே அந்தரங்கமான பகுதிகளையும் நாம் வெளிப்படுத்தக்கூடாது.

அவைகளை மறைத்து வைப்பதுதான் மானம். அவைகளை வெளிப்படுத்துவது அவமானம். மானம் காப்பதும் இறைநம்பிக்கையின் ஒரு அங்கமாகவே சேர்க்கப்படுகிறது. மானத்தை காக்கும் ஒரு கேடயம் தான் வெட்கம். மானத்தை காக்கும் ஒரு பொக்கிஷம் தான் ஆடை.

வெட்கத்தன்மைதான் மறைவிடங்களை மறைப்பதற்கு தூண்டுகோலாக அமைகிறது. மறைவிடங்களை வெளிப்படுத்துவது வெட்கமற்ற தன்மையின் வெளிப்பாடு. மானம் காப்பதும், மறைவிடங்களை மறைப்பதும் வெட்கத்தின் அடையாளம்.

ஒருவர் வெட்கப்படுவது நல்ல செயல்தான். வெட்கத்தை ஆடையாக அணிந்தவரிடம் மக்கள் குறை காணவோ, குறை கூறவோ முடியாது. அது மனித வாழ்வின் உயிர் மூச்சு போன்றது. வெட்கமுள்ளவன் நல்ல மனிதனாக வாழ்வான். வெட்கம் கெட்டவன் மிருகமாகவும், பாவியாகவும் மாறிவிடுகின்றான்.

வெட்கத்தால் நன்மை மட்டுமே விளையும். வெட்கம் தவறிவிட்டால், கண்டதும் செய்ய நேரிடும். வெட்கம் ஒரு அருங்குணம். அது நன்மையைத் தூண்டும். வெட்கமின்மை ஒரு துர்குணம். அது தீமையைத் தூண்டும்.

'வெட்கம் இறைநம்பிக்கையைச் சார்ந்தது. இறைநம்பிக்கை சொர்க்கத்தை நல்கும். வெட்கமற்ற தன்மை முரட்டு சுபாவமாகும்.

'ஆடை என்பது இறைவன் மனிதகுலத்திற்கு வழங்கிய மகத்தான ஒரு அருட்கொடை. மனித இனம் தவிர வேறெந்த இனமும் ஆடை அணிவதில்லை. நாம் அணியும் ஆடை நமது மறைவிடங்களை மறைத்து, மானம் காக்க வேண்டும். மானம் பறிபோகக்கூடாது.

ஆடை எவ்வாறு மறைவிடங்களை மறைத்து மானத்தை காக்கிறதோ, அவ்வாறே கணவன் தமது மனைவியின் மானம், மரியாதையையும்; மனைவி தமது கணவனின் மானம், மரியாதையையும் பேணி பாதுகாக்க வேண்டும்.

ஆண்களும், பெண்களும் தமது வெட்கத்தலங்களை மறைப்பது ஒழுக்கம் சார்ந்த விஷயம் மட்டுமல்ல. இறைநம்பிக்கை சார்ந்த விஷயமாகவும் பார்க்கப்படுகிறது. இதுவும் இறைநம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரு களமாக அமைந்துள்ளது. உண்மையான வெற்றி இதில்தான் உள்ளது.



## தம்பி...

பின் அடுத்த தலைவர் தானே என்ற முறையில் சுமந்திரன் காய்களை உருட்டி விளையாடுகிறார். அவர் சம்பந்தரையும் மாவையையும் ஓரம் கட்டி கட்சித் தலைமைத்துவத்தைப் பெற முயற்சிக்கிறார்.
இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன்.
அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த வாராந்தக் கேள்வி பதிலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் அனுப்பிய அந்தக் கேள்வி பதில் வருமாறு
தமிழ் மக்கள் கூட்டணியின் அங்கத்தவர் ஒருவர் என்னுடன் கலந்துரையாடியவற்றை இவ் வாரத்துக்கொரு கேள்வியாகத் தருகின்றேன்.

**கேள்வி:**சேர்! நாங்கள் உங்களை சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் மாவைக்கும் ஒருமாற்றுத் தலைவராக நினைத்திருக்கும் போது நீங்கள் எப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றப்பட்டால் அக்கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் பயணிப்பதை பரிசீலிக்க முடியும் என்று கூறலாம்? போதாக்குறைக்கு செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் இது பற்றிநடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியுள்ளார்கள். எங்களை எல்லாம் விட்டுச் செல்ல துணிந்துவிட்டீர்களா?

**பதில்:** இல்லை. நான் உங்களுடனேதான் இருப்பேன். நீங்கள் என்னுடனேதான் இருப்பீர்கள். பலவிடயங்களைநீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

1. சம்பந்தன்,சுமந்திரன்,மாவை போன்றவர்கள் தமது தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்க முன்வருவார் களா?அதை முதலில் சிந்தியுங்கள்.
2. கூட்டமைப்பின் அடுத்ததலைவர் தானேஎன்றமுறையில்திருசுமந்திரன் காய்களை உருட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?அவர் தமது கனவுகளைச் சிதைக்க ஒத்துக்கொள்வாரா? தந்தை செல்வாவுக்கும் அவருக்கும் இடையில் குண அளவில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலானவேற்றுமை இருப்பினும் அடுத்த தந்தை செல்வா தானே என்று முழுமையாக நம்புகின்ற அவர் எவ்வாறு தலைமைத்துவத்தை விட்டுக் கொடுப்பார்?
3. அவர் மாவையையும் சம்பந்தனையும் இன்னும் பலரையும் ஓரங்கட்டிதலைமைத்துவத்தைத் தானே பெற முயல்கின்றார் என்பதை அறியமாட்டீர்களா?
4. "எங்கள் கட்சியையே தேசியத்தலைவர் அடையாளம் காட்டினார்; நாங்களே உண்மையானவாரிசுகள்"என்றுதேர்தலின் போதுஆர்னல்டும்,சயந்தனும், சுமந்திரனுடன் சேர்ந்து மார்தட்டப்போவதை உங்களால் யூகிக்க முடியாதிருக்கின்றதா?
5. சென்றமுறை நடந்ததேர்தலில் நேர்ந்த அதே தவறுகள் மேலும் இன்னும் பெரிய விதத்தில் இம்முறை நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ரணில் இல்லாவிட்டால் சிலரால் இயங்கமுடியாது என்று எண்ணுகின்றீர்களா?

தம்பிதொடக்கிவிட்ட கூட்டு,தவறான தலைவர்களின் கைகளுக்குமாறிவிட்டால் என்னநடக்கும்? கொள்கைகள் பறிபோவன. சுயநலம் தலைவிரித்தாடும்.
மக்கள் தம்பியின் பெயரைக் கேட்டு மயங்கி தம்பி தொடக்கிய பழையகட்சியான த.தே.கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள். பதவிக்கு வந்ததும் இவ்வாறானவர்கள் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு பொருளாதார விருத்தி பற்றிப் பேசுவார்கள். இதுவரை எமது 15 நாடாளுமன்றஅங்கத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை மறந்ததுபோல் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கஞ்சிப் பானைக்கு காலப்போக்கில் விற்று விடுவார்கள்.
அவர்களைப் பொறுத்தவரையில் "வட கிழக்கை இணைக்கமுடியாது: சமஷ்டி கிடையாது: எமதுதேசியம் வெறும் கூக்குரலேயன்றி இறைமையை வேண்டுவது முட்டாள் தனம். ஒற்றையாட்சிக்குள் கிடைப்பதை சுருட்டிக் கொள்வோம். நாம் பதவியில் இருக்கும் அரசாங்கத்துடன் சேர்ந்து எமது தனிப்பட்ட நலன்களையும் பெற்று பொருளாதாரச் சலுகைகளையும் பெற்றுக் கொடுப்போம் " என்றமனோநிலையிலேயேபயணஞ் செய்வார்கள்.
கொள்கைப் பற்றுறுதியுடன் இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத்தான் அதன் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் இன்று இந்தகேவலமானநிலைக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.
இந்த நாட்டை சிங்கள பௌத்தநாடென்று உருமாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்டும் காணாததுபோல் எமது அரசியல்வாதிகள் நடமாடுவது எமக்குவேதனையை அளிக்கின்றது.எம்முள் இருக்கும் முரண்பாடுகளை ஒற்றுமையின்மையை இதுவரை மத்திய அரசாங்கங்கள் தமக்குச் சார்பாக பயன்படுத்தி வந்துள்ளன.
உதாரணமாகப் பார்த்தால்; இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையென்றால் எமது தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள் சிலர் தாமாகத் தனித்தே மத்திய அரசாங்கத்துடன் பேசுகின்றார்கள். மற்றவர்களைப் பங்குகொள்ள விடுவதில்லை. சிலநேரங்களில்மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறுவார்கள். இந்தத் தெரியாதவர்களை தேர்ந்தெடுப்பதும் இவர்கள் தான். தம்முடன் முரண்படாமல் செல்லக் கூடியவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டுஅவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று கூறுவது தம்மைஅதிகாரத்தில் வைத்துக்கொள்ளவே. அதிகாரத்தைத் தம் கைகளுள் வைத்திருக்கவேண்டும் என்ற இவர்களின்பலவீனத்தை வைத்து மத்தியஅரசாங்கம் இவர்களைத் தம்வசப்படுத்துகின்றது. எனவே இனப்பிரச்சினைக்கானபேச்சுவார்த்தையாக இருந்தாலும் சர்வதேச மத்தியஸ்தம் இருக்கவேண்டும் என்பதே எனதுநிலைப்பாடாகும்.
எதுஎவ்வாறெனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தற்போதையதலைமைத்துவம் மாற்றப்படவேண்டும் என்று நான் கூறினேனேஒளியஅத்தலைமைத்துவத்தைஎனக்குத் தாருங்கள் என்றுஎப்போதுமே கூறவில்லை.
சிலர் நான் மாற்றுத் தலைமைக்காக அலைகின்றேன் என்கின்றார்கள். மாற்று அரசியல் தலைமை எனக்குக் கிடைத்து நான் என்ன செய்யப் போகின்றேன்? எனக்கு வேண்டுவது ஒன்றே ஒன் றுமட்டுமே!எமதுதமிழ் மக்களின் வருங்காலம். அவர்கள் மாண்புடனும், மதிப்புடனும் வாழவேண்டும். அவர்கள் ஒற்றுமைப்படவேண்டும். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். அதுமேம்படவேண்டும். அதனைமனதில் வைத்தேநான் அவ்வாறு கூறினேன்- என்றுள்ளது.(ம)

## தீர்வு...

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகின்றது. அந்தத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெறுவதற்கான வியூகங்களைத் தான் தற்போது நாம் வகுத்து வருகின்றோம். இந்தத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஓரணியில் நின்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதே எமது இலக்கு.
நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவுள்ள எமது ஆட்சியில்தான் ஜனாதிபதி பிரதமர் தலைமையில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காணும் பணிகள் முன்னெடுக்கப்படும். சகல தரப்பினருடனும் பேசித்தான் தீர்வு காணப்படும்.
தமிழ் மக்களுக்கான தீர்வுப் பொதியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தட்டில் வைத்துத் தரும் என்று இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கனவு காண்கிறார்கள். அப்படி அவர்கள் கனவு காண்பதில் எந்தவிதப் பயனும் இல்லை. முதலில் அவர்கள் எம்முடன் நேரில் வந்து பேச வேண்டும். அவர்கள் எம்முடன் நேரில் பேசப் பின்னடிக்கின்றார்கள். இரு தரப்பும் மனம் விட்டுப் பேசினால் தான் ஒரு முடிவுக்கு வரலாம்.
அதைவிடுத்து தீர்வு வேண்டும் எனக் கோரி இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளைக் கூட்டமைப்பினர் நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை. ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையிலும் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கும் முகமாகவும் சிங்கள மக்கள் ஏற்கும் விதத்திலுமான அரசியல் தீர்வைத்தான் எம்மால் காண முடியும்' -என்றார். (ம-22

## ரணிலே...

டைந்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து சஜித் பிரேமதாஸ விலகியிருந்தார். இவரைக் கட்சியின் தலைவராக நியமிக்குமாறு இவரின் ஆதரவு அணியினர் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பம் நிலவி வருகின்றது.
இந்தநிலையில், சஜித் பிரேமதாஸவை மீண்டும் ஐ.தே.கவின் பிரதித் தலைவராக நியமிப்பதற்குக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் தொடர்பான தெரிவுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே சஜித் பிரேமதாஸவை மீண்டும் பிரதித் தலைவராக நியமிப்ப தற்கும் கட்சியில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் கட்சியின் மத்திய குழுவுக்கான அனைத்து உறுப்பினர்களும் நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பிரதி தலைவர் சஜித் பிரேமதாஸ, உப தலைவர் ரவி கருணாநாயக்க, தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரை உள்ளடக்கிய ஆலோசனை சபையின் அனுமதியுடனேயே ரணில் விக்கிரமசிங்க செயற்குழு உறுப்பினர்களை நியமித்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ம-22)

## வல்வெட்டித்...

என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.
சுமார் ஒரு வாரத்துக்கும் மேலாகத் தேடப்பட்ட குறித்த நபர் வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள மாடிவீடு ஒன்றில் உள்ளார் என்று கிடைத்த தகவலை அடுத்து நேற்று மதியம் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அந்த வீட்டைச் சுற்றிவளைத்து மேற்படி இளைஞனைக் கைது செய்தனர். அவருடன் இருந்த இன்னொரு நபரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.
(ம-26)

## அரசியல்...

கலந்துரையாடல் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது. இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கட்சியினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சந்திப்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் மேலும் தெரிவித்ததாவது:
அரசியல் கைதிகளாக இருக்கின்றவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி நாம் பேச்சுக்களில் ஈடுபட இருக்கின்றோம். போர் நிறைவடைந்து பத்து வருடங்களாகியும் தொடர்ந்து சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியை நாம் வலியுறுத்தவுள்ளோம்.
போராளிகளின் கைகளில் அதிகாரம் வரும் வரை முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தலைமைகள் உதாசீனமாக செயற்படுவது தொடரத்தான் போகின்றது. ஆகவே எதிர்வருகின்ற காலத்தில் போராளிகளின் ஜனநாயக வெற்றி, முன்னாள் போராளிகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமையும்.
அண்மையில் ஜனாதிபதியால் அறிவிக்கப்பாட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்குள் முன்னாள் போராளிகள் அதிகளவில் உள்வாங்கக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகநாம்கருதுகின்றோம். அத்துடன்மாற்று அரசியல்தலைமை என்பது பெயரளவில் இல்லாமல் சிறந்த கொள்கைகளோடு செயற்பட வேண்டும் - என்றனர். (ம-110)







# இன்றைய நாள்

**மேடம்:** இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம். மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். பணிகளில் பாதுகாப்பு தேவை. தொழிலில் இலக்கு நிறைவேற சில காலம் தேவைப்படும். முக்கிய செலவுகளுக்கு கடன் பெறலாம்.

**மிதுனம்:** நேர்மை குணங்களை மதித்து நடப்பீர்கள். நண்பர், உறவினர் ஊக்கம் தருவர். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கடகம்:** சந்தோஷ சிந்தனைகள் உற்சாகப்படுத்தும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பேச வேண்டாம். திட்டமிட்ட பணிகளில் கவனம் தேவை. தொழில், வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். வரவை விட செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** அவசரப்பணி ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவை பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் பிறரால் இடையூறு வராமல் பாதுகாக்க வேண்டும்.

**துலாம்:** சந்தோஷ நிகழ்வை நண்பரிடம் பகிர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். புத்திரரின் அரசியல்வாதிகள் நற்செயலால் கூடுதல் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பரிடம் சில விடயம் பேசுவீர்கள். எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலங்களை பாதுகாக்கவும்.

**தனுசு:** தன்னம்பிக்கை வளரும். இடையூறுகளை எளிதாக சரி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணவரவு உரிய சேமிப்பாகும்.

**மகரம்:** திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக முயற்சி தேவைப்படும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட பணி நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி முன்னேற்றம் அடையும். உபரி வருமானம் கிடைக்கும். தகுந்த ஓய்வு உடல் நலம் பாதுகாக்கும்.

**மீனம்:** அனுபவ அறிவு புதிய நன்மைகளைத் தரும். உறவினர் செய்த உதவிக்கு நன்றி செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும்.

# கிரீஸ் தலைவராக பெண் தெரிவு

எதேன்ஸ், ஜன. 24

ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடு கிரீஸ் குடியரசு (கிரேக்கம்). ஜனநாயக நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பல ஆண்டுகள் கடந்த பின்னரும் இதுவரை அந்த நாட்டின் தலைவராக ஒரு பெண் கூட தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை.

இந்த நிலையில், கிரீஸ் நாட்டின் முதல் பெண் தலைவராக கதர்னி செகலாரோப்லூ (வயது63) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அந்த நாட்டு நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக உள்ள இவரை அந்த நாட்டின் பிரதமர் க்ரியாகோஷ மிட்சோடகிசின் தலைவர் பதவிக்கு பரிந்துரை செய்தார்.

இதையடுத்து கதர்னியை கிரீஸ் தலைவராகத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது. 300 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உள்பட 261 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கதர்னிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கிரீஸ் குடியரசின் முதல் பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கதர்னி செகலாரோப்லூ மார்ச் 13ஆம் திகதி அதிகார பூர்வமாகப் பதவியேற்க உள்ளார்.

தற்போது கிரீஸ் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கதர்னி அந்த நாட்டின் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)





# பாடசாலை மாணவர் 24 பேர் கடத்தல்

யாவுண்டே, ஜன. 24

ஆபிரிக்க நாடான கமரூனில் 2017ஆம் ஆண்டு முதல் ஆயுதம் ஏந்திய பிரிவினைவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவர்கள் நாட்டின் வட மேற்கு மற்றும் தென்மேற்கு ஆங்கிலோபோன் பிராந்தியத்தை தனி நாடாக்க ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர்.

ஆங்கில மொழி பேசக்கூடிய மெமே பிராந்தியத்தில், கும்பா நகரில் உள்ள பாடசாலைக்குள் நேற்று முன்தினம் பிரிவினைவாதிகள் நுழைந்தனர். அங்கிருந்து 24 பாடசாலை மாணவர்களைக் கடத்திச்சென்று விட்டனர். இது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. குழந்தைகளின் பெற்றோர் மிகுந்த வேதனைக்குள்ளாயினர். குழந்தைகளைப் பத்திரமாக மீட்க வேண்டும் என்ற குரல் தீவிரமாக ஒலித்தது. அதைத் தொடர்ந்து பிரிவினைவாதிகள் மாணவர்களைக் கடத்திச்சென்று வைத்திருந்த காட்டுக்குள் இராணுவம் அதிரடியாக நுழைந்தது.

அப்போது குழந்தைகளை விடுவிக்க மறுத்த பிரிவினைவாதிகள், இராணுவத்தினர் மீது துப்பாக்கியால் சுட்டார்கள். உடனே இராணுவம் சரியான பதிலடி கொடுத்தது. இரு தரப்பினரிடையே நீண்ட நேரம் துப்பாக்கிச்சண்டை நடந்தது. முடிவில் 2 பிரிவினைவாதிகள் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து 24 மாணவர்களையும் இராணுவத்தினர் பத்திரமாக மீட்டனர். அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. மீட்கப்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அது நெகிழ்ச்சியானதாக அமைந்தது. கமரூனில் தேர்தல் நெருங்கி வருகிற வேளையில், வட மேற்கு மற்றும் தென்மேற்கு ஆங்கிலோபோன் பிராந்தியத்தில் ஆள்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை மக்களிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது. (ஒ.5)

# கொரோனோ வைரஸால் போக்குவரத்துக் கட்டுப்பாடு

பீஜிங், ஜன. 24

சீனாவின் வுகான் நகரிலிருந்து கொரோனோ வைரஸ் நோய் முதலில் பரவியது. ஜப்பான், தென் கொரியா, தாய்லாந்து, தைவான் ஆகிய நாடுகளிலும் இந்த வைரஸின் தாக்கம் உள்ளது.

புதிய கொரோனோ வைரஸ் உருமாற்றம் அடைந்து மற்ற நாடுகளுக்கும் பரவலாம் என்று சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த வைரஸ் பரவுவதைத் தடுக்க, உலக நாடுகள் அனைத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

சுவாசக்கோளாறுகளை ஏற்படுத்தி உயிரிழப்பை உண்டாக்கும் இந்த வைரஸால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவில் 9 பேர் இந்த வைரஸ் காய்ச்சலுக்கு நேற்று வரையில் உயிரிழந்துள்ளனர் என சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



மேலும் 8 பேர் கொரோனோ வைரஸால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் முக்கிய நகரமான ஷான்காயிலும் 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். நாடு முழுவதிலும் மொத்தம், 571 நபர்கள் இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஒரு சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனோ வைரஸ் நோய்த் தாக்குதலின் எதிரொலியாக வுகான் நகருக்கான விமான சேவை உள்ளிட்ட அனைத்துவிதமான பொது போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அந்நகருக்குள் யாரும் நுழையவும், அங்கிருந்து வெளியே செல்லவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (ஒ.5)

# பூமியில் சூரியனை விடவும் பழமையான திடப்பொருள்

நியூயோர்க், ஜன. 24

கோடிக்கணக்கான விண்மீன்களின் தொகுதியே அண்டம். கோடிக்கணக்கான அண்டங்களின் தொகுதியே பேரண்டம். பேரண்டத்தில் காணப்படும் பல்வேறு அண்டங்களில் ஒன்றுதான் பால்வெளி மண்டலம். சூரியன் உள்பட கண்களுக்குத் தெரியும் அனைத்துமே பால்வெளி மண்டலத்தைச் சார்ந்தவை. பால் வெளியும் மிக அடர்த்தியான விண்மீன்களின் தொகுதிதான்.

அவற்றுள் பல விண்மீன்கள் சூரியனை விட பல மடங்கு பெரியன. அவை மிக நீண்ட தொலைவில் தூரத்திலே இருப்பதாலே கண்களுக்கு வெறும் புள்ளிகள் போன்று தெரிகின்றன.


ஒரு மிக சக்திவாய்ந்த வெடிப்பின் காரணமாக திடீரென பிரகாசத்தைப் பெரிதும் அதிகரிக்கும் ஒரு நட்சத்திரம், அதன் நிறையை வெளியேற்றுகிறது. இந்த நட்சத்திரம் சூப்பர்நோவா என்று அழைக்கப்படுகிறது. விஞ்ஞானத்தின் படி, ஸ்டார் டஸ்ட் எனும் விண்மீன் துகள்கள் ஒரு சூப்பர்நோவா வெடிப்பிலிருந்து மீதமுள்ள துகள்களால் ஆனது.

விண்வெளியில் மிதக்கும் தூசி மற்றும் வாயு ஒன்றுடன் ஒன்று மோதி வெப்பமடையும் போது விண்மீன்கள் உருவாக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாது அறிவியலின் படி விண்மீன்கள் என்றென்றும் பிரகாசிப்பதில்லை. நம்மைப் போல, மற்ற எல்லா உயிரினங்களைப்போலவே, அவை பிறக்கின்றன, வாழ்கின்றன, பின்னர் இறக்கின்றன.

மில்லியன் கணக்கான ஆண்டுகளாக எரியும் நட்சத்திரங்களின் ஆயுள்காலம் முடிவடைந்த பின்னர் அதன் துகள்கள் விண்வெளியில் வீசப்படுகின்றன. நமது பால்வெளியில் ஆற்றல் மூலமாக இருக்கும் சூரியன் உருவாவதற்கு முன்னதாகவே விண்மீன்கள் உருவாகியிருந்தன எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், பூமியில் விழுந்த விண்கல்லினுள் இருந்த விண்மீன் துகள்கள் தான் பூமியின் மிகப்பழமையான திடப்பொருள் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

வானியற்பியலில், அண்டக்கதிர் என்பது குறிப்பாகச் சூரியக் குடும்பத்திற்கு வெளியில் இருந்து வரக்கூடிய ஓர் உயர்ஆற்றல் பெற்ற அணுத் துகள் ஆகும். கொஸ்மிக் கதிர்கள் உற்பத்தி மூலக்கூறுகள் வான்வெளித் துகள்களில் எவ்வளவு உள்ளதை என்பதை கணிப்பதன் மூலம் அவை எவ்வளவு ஆண்டுகள் பழமையானது எனக் கண்டறிய முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



1969ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் விழுந்த முர்சிசன் என்ற விண்கல்லை ஆய்வு செய்த அமெரிக்க ஆய்வாளர்கள் அதில் சூரியனுக்கும் முந்தைய துகள்கள் உள்ளனர் எனக் கண்டறிந்துள்ளனர்.

அவற்றில் உள்ள துகள்கள் 4.6 முதல் 4.9 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையவை எனவும் அவற்றுள் உள்ள மற்றும் சில துகள்கள் சுமார் 5.5 பில்லியன் ஆண்டுகளுக்கும் முந்தையது எனவும் கண்டறிந்துள்ளனர். இவை பூமியில் உள்ள திடப்பொருள்களில் மிகவும் பழமையானது எனவும் சூரியனுக்கும் முன்பு உருவானவை எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அறிவியலாளர்களின் கருத்துப்படி சூரியனின் வயது 4.603 பில்லியன் ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## மாநகரசபை யாழ்ப்பாணம் கூறுவிலை கோரல்

மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீதிகள் அமைத்தல் புனரமைப்பு செய்வதற்கு தேவையான கீழ்வரும் மூலப்பொருட்களை விரைவாக வழங்கக் கூடிய வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான கூறுவிலைப் படிவங்களை 24.01.2020 ஆம் திகதி தொடக்கம் 03.02.2020 திகதி வரை கொள்வனவுப் பகுதியில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் **இடது பக்க மூலையில் கூறுவிலை இலக்கம் PO/DA2/Metal/2020** எனக் குறிப்பிட்டு **முதல்வர் மாநகர சபை யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **07.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால்** மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

| இல. | விபரம் | தேவைப்படும் அளவு (அண்ணளவாக) |
|---|---|---|
| 01 | 1/2" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 02 | 3/4" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 03 | 1" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 04 | 11/2" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 05 | 2" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 06 | 4" அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cube |
| 07 | 6-9 அளவுள்ள கருங்கல் | 50 Cube |
| 08 | கருங்கல் டஸ்ற் | 50 Cube |
| 09 | கண்டாவளை மணல் | 50 Cube |
| 10 | நாகர்கோயில் மணல் | 10 Cube |
| 11 | கிரவல N0-1 | 50 Cube |

**குறிப்பு:** - VAT வரி செலுத்துபவராயின் VAT Number I குறிப்பிடுக.

**முதல்வர் மாநகரசபை யாழ்ப்பாணம்.**

20.01.2020








முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுனர் திறனாய்வுப் போட்டி 2020 நேற்று பாடசாலை மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (222)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.ஐ.சி. பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜன.24

நாச்சிக்குடா குழந்தை இயேசு விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான மகிமை வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை நாச்சிக்குடா குழந்தை இயேசு விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் இன்று காலை 9மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜின்னா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜெயபுரம் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிகுடா சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா குழந்தை இயேசு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இன்னிசை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

# சென்.பற்றிக்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜன.24

கிருபா சாரதி பயிற்சி கல்லூரியின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை அணி மோதியது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி கால்பந்தாட்ட அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



# சாதனையாளர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் தேசியமட்ட விசேட கல்வி விளையாட்டுப் போட்டி சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் இடம்பெற்றது.



முன்னதாக 2019ஆம் ஆண்டில் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற சாதனையாளர்களை கௌரவிக்கும் ஊர்வலம் கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து தமிழர் கலாசார விழுமியங்களை எடுத்தியம்பும் மயிலாட்டம், பொய்க்கால்குதிரை, பொம்மலாட்டம், புலியாட்டத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சாதனையாளர்கள் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்ட கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தின் இராசநாயகம் அரங்கில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்ட போட்டிகளில் சாதனை படைத்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (23.6)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும், கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 12:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும், சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புது மடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

குளத்தடி கண்ணகி விளையாட்டுக்கழக அணிக்கும், புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குளத்தடி கண்ணகி விளையாட்டுக்கழக அணி 13:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மயிலிட்டி வானவில் விளையாட்டுக்கழக அணிக்கும், உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும், கைதடி தூர்க்கா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணிக்கும், கைதடி செவின்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி 14:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணிக்கும், புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணி 11:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

நாவலர் விளையாட்டுக்கழக அணிக்கும், சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக்கழக அணி 7:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜன.24

கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பூநகரி கால் பந்தாட்ட உப லீக்கின் அனுசரணையுடன் பூநகரி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான இளந்தளிர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் செல்சிற்றி விளையாட்டுக்கழக அணிக்கும் பூநகரி ஜயனார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செல்சிற்றி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரணைமாதா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் உதயநிலா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணைமாதா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பூநகரி அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் கல்மடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கல்மடு அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4.45 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# இந்தியா - நியூசிலாந்து முதலாவது ரி-20 இன்று




இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ரி-20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் முதலாவது ரி-20 போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

நியூஸிலாந்தில் இந்திய அணி எதிர்கொள்ளும் 2 ஆவது ரி20 தொடர் இதுவாகும். கடந்த முறை இடம்பெற்ற ரி-20 தொடரை 2:1 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் இதுவரை நியூஸிலாந்து அணியுடன் 11 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள இந்திய அணி 3 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 8 போட்டிகளில் நியூஸிலாந்து அணிதான் வென்றிருக்கிறது.

இந்தியா- நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதல் ஆட்டம் ஆக்லாந்தில் இன்று இடம்பெறவுள்ளது. அதிவேகமான ஆடுகளம், மாலை நேரத்தில் லேசான மழைக்கு வாய்ப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் இன்று போட்டி இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அணியில் ஷிகர் தவண், ஹர்திக் பாண்டியா, புவனேஷ்வர் குமார், தீபக் சாஹர் ஆகியோர் காயம் காரணமாக இடம் பெறாமல் இருப்பது அணிக்கு சற்று பின்னடைவே. எனினும் ஏனைய வீரர்களின் ஆட்டம் சிறப்பாக உள்ளது அணிக்குப் பலம். ஆக்லாந்து ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும்.

நியூஸிலாந்து அணியின் முக்கிய வீரர்களான டிரன்ட் போல்ட், மாட் ஹென்றி, லாக்கி பெர்குசன் ஆகிய முக்கிய வீரர்கள் காயம் காரணமாக இடம் பெறாதது அந்த அணிக்குப் பின்னடைவாகும். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கில் இழந்து மிகுந்த நம்பிக்கையிழந்த நிலையில் நியூஸிலாந்து அணி காணப்படுகிறது.

இந்த முறை நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹேனிஷ் பென்னட் என்ற அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். காயம் காரணமாக அணியிலிருந்து சில காலம் இடம்பெறாத நிலையில் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். அவரின் மீட்சி நியூசிலாந்து அணிக்குப் பெரும் பலம்.

# சென்.ஆன்ஸ் அசத்தலாட்டம்

மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் வங்காலை சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

எருக்கலம்பிட்டி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வங்காலை சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பணங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று பணங்கட்டு கொட்டு சென்.ஜோசப் அணி களத்தடுப்பை தீர்மானித்து. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வங்காலை சென்.ஆன்ஸ் அணி 29 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் அரவிந்தன் 61 ஓட்டங்களையும், நிரஞ்சன் 15 ஓட்டங்களையும், வசந்தன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரித்வியன் 4 இலக்குகளையும். நிஜந்தன், டானியல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பணங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி 34.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. அணி சார்பில் வேல்டன் 47 ஓட்டங்களையும் தனுசன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் வோஸ்சன், வசந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். (23)



# கிரிக்கெட்டுக்கு எடுத்துக்காட்டு நியூசிலாந்து அணி வீரர்கள்

## கோக்லி பெருமிதம்

நியூசிலாந்து அணியை எதிர்த்து விளையாடும்போது உலக கோப்பை அரையிறுதி தோல்விக்கு பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் வராது என்று




விராட் கோக்லி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற உலக கோப்பை அரையிறுதி போட்டியில் இந்தியாவை வீழ்த்தி நியூசிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அதன்பின்னர் இந்தியா - நியூசிலாந்து அணிகள் தற்போது விளையாட இருக்கின்றன. அந்த தோல்விக்கு பழி தீர்க்கப்படுமா என்ற கேள்விக்கு கோக்லியின் பதில்;

"நீங்கள் அவர்களை பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று விரும்பினால் கூட, நியூசிலாந்து அணி வீரர்கள் நல்லவர்கள். அவர்களுக்கு எதிராக உங்களுக்கு அந்த எண்ணம் வராது. அவர்களுடன் நாங்கள் சிறந்த முறையில் மைதானத்தில் போட்டியிடுகிறோம். சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் அணிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அவர்கள் விளங்கினர் என்பதை இங்கிலாந்து உலக கோப்பை தொடரின்போதே கூறியிருந்தேன்.

ஒவ்வொரு பந்திற்கும், ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புவார்கள். ஏற்றுக்கொள்ள முடியாத எந்த சைகையையும் அவர்கள் மைதானத்தில் செய்ய மாட்டார்கள்- என்றார்.

# பதவி விலகத் தயார் வில்லியம்சன் அதிரடி

கேப்டன் பதவியை துறக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ள நிலையில், எதற்கும் தயார் என கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

மூன்று வகை கிரிக்கெட்டிலும் நியூசிலாந்து அணி கேப்டனாக கேன் வில்லியம்சன் உள்ளார். சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கில் இழந்தது. இந்தப் போட்டியில் கேன் வில்லியம்சனும் ரன்கள் பெரிதாக எடுக்கவில்லை.

இதனால் குறைந்தபட்சம் ரி-20 கிரிக்கெட் கேப்டன் பதவியிலிருந்து விலக வேண்டும் என எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந்த நிலையில் அணிக்கு உதவும் என்றால் கேப்டன் பதவியை துறக்க தயார் என்று கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.





# அதீத தற்காப்பு ஆட்டம் சிம்பாப்வேக்கு ஆப்பு

சிம்பாப்வே அணியை 10 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, இலகு வெற்றி பெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது இலங்கை அணி.

இலங்கை அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹராரேயில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 358 ரன்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணி 515 ரன்களைப் பெற்று 157 ரன்கள் முன்னிலையில் காணப்பட்டது.



இந்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய சிம்பாப்வே அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 30 ரன்களைப் பெற்றிருந்தது. அணி சார்பில் மசூவர் 15 ரன்களுடனும், முட்சிங்கானுயா 14 ரன்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். அணி களமிறங்கி 3 ஓட்டங்களைப் பெற்ற போது மசூவர் 17 ரன்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்கள் ரன் அடிப்பதில் கவனம் செலுத்துவதை விடுத்து இலக்குகளைக் தக்க வைத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி, அதீத தற்காப்பு ஆட்டங்களை வெளிப்படுத்தி போட்டியை சமநிலைக்குக் கொண்டு செல்வதில் முனைப்புக் காட்டி இறுதியில் விக்கெட்டுக்களை பறிகொடுத்தனர். அணி வீரர்கள் எவரும் 40 ரன்களைத் தாண்டவில்லை. அணி சகல விக்கெட் டுக்களையும் இழந்து 170 ரன்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் லக்மல் 4 விக்கெட்டையும், குமார 3 விக்கெட்டையும், எம்புலுடெனியா 2 விக்கெட்டையும், ரஜித ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக இறுதி நாளான நேற்று 14 ரன்கள் மாத்திரமே நிர்ணயிக்கப்பட்டது. இலக்கு இலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் 3 ஓவர்களில் வெற்றியை பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக இலங்கை அணி வீரர் மத்தியூஸ் தெரிவானார். இரு அணிகளுக்குமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் திங்கட் கிழமை ஆரம்பமாகும்.

# எங்களை நினைவில் வைத்திருங்கள்

## முஸ்டாபிஜுர் ரஹ்மானின் ருவிட்டர் பதிவால் சர்ச்சை

பாகிஸ்தானுக்குச் செல்கிறோம், உங்களுடைய பிரார்த்தனையில் எங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்ற பங்களாதேஷ் வீரரின் டுவிட் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகள், ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இந்த நிலையில் அந்த அணி நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் சென்று களமிறங்கியது.

முன்னதாக பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலைமை மோசமாக இருப்பதால் பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்கள் இந்த தொடருக்காக பாகிஸ்தானுக்கு செல்ல விரும்பவில்லை. முஷ்பிகுர் ரஹிம் போன்ற மூத்த வீரர்கள் தனிப்பட்ட காரணங்களைக் கூறி பாகிஸ்தான் செல்ல தயங்கினர். அதன்பிறகு, பங்களாதேஷ் இளம் வீரர்களும் சுற்று பயணத்திலிருந்து வெளியேற இருந்தனர். இரு அணிகளின் கிரிக்கெட் சபைகளின் பல கட்ட ஆலோசனைகளின் பின்னர் பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் சென்றது.

அங்கு செல்வதற்கு முன்னர் பங்களாதேஷ் அணி வீரர் முஸ்டாபிஜுர் ரஹ்மானின் ட்விட் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது

அணி புறப்படுவதற்கு முன்னர் தனது அணியினருடன் சேர்ந்து ஒரு செல்ஃபி எடுத்த ரஹ்மான் அதில் டுவிட்டரில் பதிவிட்டு தம்மைப் பின்பற்றுபவர்களிடம் அவர்களுக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொண்டார்: அதில் "பாகிஸ்தானுக்குச் செல்கிறோம், உங்கள் பிரார்த்தனைகளில் எங்களை நினைவில் கொள்ளுங்கள்" என கூறி உள்ளார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு காரணத்தை சுட்டிக்காட்டிதான் இப்படி டுவிட் செய்துள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது.



போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLAS
சனி, ஞாயிறு 9.00 - 4.00
SLAcS
சனி, ஞாயிறு 9.00 - 4.00
சகல பரீட்சைக்குமான IQ + GK
சனி, ஞாயிறு 9.00 - 1.00
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ் நகர்
SLAS (Ltd) இறுதிக் கருத்தரங்கு
25.01.2020 சனி
9Am-5Pm
R.C அமல்ராஜ் SLAS
K.கீர்த்தி MA
27.01.2020 Mon
29.01.2020 Wed
4Pm-7Pm
P.கமல்தாசன் SLPS
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 111 6739, 076 166 1986

போட்டிப் பரீட்சை இறுதிக் கருத்தரங்கு
உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS (Limited)
பொது அறிவு / நுண்ணறிவு } உமாசங்கர்
26.01.2020 ஞாயிறு
9am- 4.00 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
நாவலர் கல்வி நிறுவனம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
076 166 1986, 077 741 7143

வீடு வாடகைக்கு
திருநெல்வேலி பலாலி வீதியில்
◆ 2 படுக்கையறை
◆ 2 குளியலறை
(வீட்டுக்கு உள்ளும், வெளியேயும்)
புதிதாக அமைக்கப்பட்ட சமையலறை உட்பட நல்ல நிலையிலுள்ள வீடொன்று உடனடியாக வாடகைக்கு விடப்படும்.
077 820 3754

# ஜோகோவிச் அடுத்து சுற்றுக்கு தகுதி

ஆஸ்திரேலியாஓபன்ரென்னிஸில்ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

நடப்பு சம்பியனும், உலகின் 2ஆம் நிலை வீரருமான செர்பியா நாட்டு வீரர் ஜோகோவிச் 2ஆவது சுற்றில் ஜப்பானை சேர்ந்த இடோவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6:1, 6:4, 6:2 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.